உ
கலைமகள் துணை.

ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் அருளிச்செய்த

# நாகுஜீவ வாதக்கட்டளை

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17692
திருப்புவன மடம் சிவமயம் TIRUPPOOVANA MADAM

தருக்க வேதாந்த போதகாசிரியர்

காஞ்சிநகர்

ஆ. செங்கல்வராய முதலியார்

இயற்றிய

இலகுபோதினி என்னும்

உரையுடன்

விலை அணா நான்கு.

Rights] 1938 [Regd.

8-1
A. No. 17692
R65 : KOV

## முகவுரை.

8-1

உம்பர் போற்றும் உயர்ந்தோரான் உயிர்கட்குறுதி யெனவோதப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பேறு நான்கனுட் சாலச்சிறந்ததாய வீட்டினை நெறியறிந்தெய்தற்குரிய ஞானசாதனங்கணிரம்பப்பெற்ற அதிகாரிகளின் பொருட்டு இறைவனுல் படைப்பின் றொடக்கத்து வெளியிட்டருளிய நான்மறையின் முடிவாய ஞானகாண்டப்பொருளினை விரித்தும், விளக்கியும் முற்றுமுணர்ந்த முனிவராராய வியாசர், சங்கரர் முதலிய பேராசிரியராலருளிச்செய்யப்பட்ட சூத்திரம், பாடிய முதலியவற்றிலுண்ணுழைந்துணருமாற்றலின்றியவராயும், வீட்டிற்கு நேர்சாதனமாய சிவப்பிரமவைக்கிய ஞானத்தைப் பெறுதலிற்றீவிரதரவிருப்ப முடையவராயுமிருக்கும் உத்தம சிஞ்ஞாசுக்களின் நலத்தினைக்குறித்துத் தம்பாலியல்பாய்த்தோன்றிய பெருங்கருணையே காரணமாக ஸ்ரீ சேஷாத்திரி சிவனுரென்னும் அடிகளால் தைத்திரீய உபநிடதத்தினை அனுசரித்தியற்றப்பட்டு, இத்தமிழுலகத்து நிலவும் ஸ்ரீ ஞானசிவவாதக்கட்டளை யென்னும் நன்னூலானது அருமறையின் முடிமணியாய்த்திகழும் பிரத்யகபின்ன பரமாத்மாவை அதத்துவாவிருத்தி யென்னும் இலக்கணத்தான் உணர்த்தும் நூல் பலவற்றுள்ளூ முதற்கண்ணுராய்தற்குரிய மகிமை வாய்ந்துளதென்பது வெள்ளிடை மலையாம்.

அன்றியும் இந்நூலானது அமிழ்தினுமினிய தமிழினின் வல்ல பரம ஆஸ்திகர்களாய நல்லாசிரியர்களாலும், உத்தம மாணவர்களாலும் பாரம்பரியமாய்ப் போற்றப்பட்டு வருதலினுலேயே, வடநூற் பயிற்சியின்றிய முமுட்சுக்களாகிய தமிழ்நூல் வல்லார்க்கு அனர்த்த நிவர்த்தி ஆனந்தப் பிராப்தி வடிவ முத்திப்பேற்றை யினிதளித்தலிற்றகுதி யுடையதென்பதும் அங்கைநெல்லிக்கனியாம்.

அதற்குப் பல வுரைகள் இருப்பினும் அவை ஸ்ரீ விசார சாகரம், விருத்திப்பிரபாகர முதலிய பெருநூல்களைப் பயின்றோர்க்கன்றிப் புதிதாய் வேதாந்த வித்தை பயில்வோர்க்குப் பெரும்பாலும் பயன்படாமையாலும், இந்நூற்குச்சுபோதினி யென்னும் உரை எம்மால் முன்னர் எழுதப்பட்டிருப்பினும் அவ்வுரையும், பிழைபட்ட மூலம் கிடைத்தமையால், அதையனுசரித்துப் பலவிடங்களில் பிழைபட்டமையானும், பெரியார் பலர் மூல நூலைச்சோதித்து உரை எழுதல்வேண்டும் என அறிவுறுத்தியமையானும் எந்தந்தையார் ஆறுமுக முதலியார் எழுதிவைத்துள்ள ஏட்டுப்பிரதிகொண்டும், பல அச்சுப்பிரதிகொண்டும் நன்கு ஆய்ந்து இதற்கு "இலகுபோதினி" என்னும் புத்துரை ஒன்று இயற்றினேம். பிழையிருப்பின் தெரிவித்தால் திருத்தி வெளியிடுவேம்.

இங்ஙனம்,
ஆ. சே.

## முகவுரை.

அல்லும் பகலும் ஒன்றன்பின் னொன்று மாறி மாறி இடையறாது வருதல் போன்று மக்கட்குச் சுகத்திற்குப் பின் துக்கமும் துக்கத்திற்குப் பின் சுகமும் வருதலியல்பாகும். அங்ஙனம வருதற்கேது தர்மா தர்மங்களெனவும், அவற்றிற்கேது இருவினையெனவும், அவற்றிற்கேது இராகத்துவேடங்களெனவும், அவற்றிற்கேது அனுகூலப் பிரதிகூல ஞானங்களெனவும், அவற்றிற்கேது பேதஞானமெனவும் அதற்கேது அஞ்ஞானமெனவும், அது அனாதி எனவும், அவ்வனாதியாய அஞ்ஞானம் நாசமுறுதற்கேது அகம் பிரமாஸ்மி என்னும் தத்துவஞானமெனவும மறை முதலியவைகூறுகின்றன. அத்தத்துவ ஞானத்தாற் சர்வம் மித்தை எனவும், சர்வம் பிரமமெனவும் அதுவே நான் எனவும் உணர்தற்கு ஸ்ரீ வாதராயணர் முதலியோர் இயற்றியுள்ள சூத்திரம், பாடியம், வார்ததிகம், உபநிடதம், கீதை முதலிய நூல்களை உணரும் ஆற்றலின்றிய மந்த ஜிஞ்ஞாசுவினிதத்தின் பொருட்டு அருளுருக்கொண்டெழுந்தருளிய ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் என்னும் பெரியாரால் தைத்திரீய வுபநிடதத்தினனுசாரமாக உலகின் றோற்றவொடுக்கங் கூறப்பட்டுத் தமிழ் நாட்டின்கண்ணிலவும் ஸ்ரீ நானாசீவவாதக் கட்டளை என்னும் இந்நூலானது மகாவாக்கியார்த்தமாகிய சீவப்பிரம ஐக்கியத்தை யுணர்த்தும் நூல் பலவற்றுள்ளும் முதன்மை வாய்ந்ததென்பது இதனை ஆராய்வோர்க்குத் தெள்ளிதிற்புலனாம்.

அன்றியும், இந்நூலானது வேதாந்த சித்தாந்தத்தை ஐயந்திரிபறவுணர்ந்த ஆன்றோர் பலராலும் போற்றப்பட்டு வருவதுடன் வடமொழிவல்லுனரன்றித் தென்மொழிவல்லுனர்க்கும் மறையின் மாண்பொருளுணர்ச்சியைப் பயக்குவித்து அனர்த்த நிவர்த்தி ஆனந்தப் பிராப்தியாய முத்தியையளிக்கவல்ல சிறந்ததோர் கருவியாம்.

இதற்கு, முன்னர்த் தருக்கவேதாந்த போதகாசிரியராய் விளங்குமெனது ஆசிரியர் காஞ்சீபுரம் ஸ்ரீமத் ஆ. செங்கல்வராய முதலியார், 'சுபோதினி' யென்னும் ஓர் உரையியற்றியுள்ளாராயினும் அப்போது சிரவணஞ் செய்துவந்த சிடர்களின் அவசரத்தால் நூலினும் உரையினும் பிழைகள் பல நேர்ந்தமையின் இந்நூலிற்குச் சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் என்னும் உத்தியினால் அவசியமாய் வேண்டு மிடங்களிற் குறிப்புரையும், பலலக்ஷணங்களும் அமையப் புத்துரை ஒன்றியற்றி அதற்கு 'இலகுபோதினி' என்னும் பெயர் சூட்டினர்.

இதனை, அப்பெரியார் விருப்பிற்கிணங்கிக் குடியேற்றம் வேதாந்த வாசகசாலையார், பலர்க்கும் பயனுறுமாறு அச்சிட ஊக்குவித்தனர். அவர்களது பெருங்கருணை என்றும் மறக்கற்பாலதன்றாம்.

இந்நூலின் உரையாசிரியர் உடற்சிரமத்தை யோர்சிறிதும் கருதாது தாமடைந்த பேற்றை உலகமுமடையும் பொருட்டு இதனையியற்றியுள்ளாராகலின் அப்பெரியார் பேராற்றலும், பெருங்கருணையும் போற்றத்தக்கவையாம்.

இந்நூலைத் திரிகரண சுத்தியோடு சற்குருவாயிலாய்க் கேட்போர்யாவரும் பொய்யினையகற்றி மெய்யினையுறுவர் என்பது திண்ணம்.

இங்ஙனம்,

இவ்வுரையாசிரியர் மாணவர்களுள் ஒருவராய

**ரா. மு. நாதமுனி முதலியார்,**

மண்டி, இராய வேலூர்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருமகள் மில்ஸ் லிமிடெட், குடியேற்றம் மானேஜிங் டைரக்டரும், சென்னை சட்ட நிருபணமன்ற அங்கத்தினரும், நளாயனி வெண்பா நூலாசிரியருமான,

திருப்பத்தூர், திருவாளர், மிட்டாதார் நூல்மளிகை

கா. அ. ஷண்முக முதலியார் அவர்கள்

# இயற்றிய சாற்றுக்கவிகள்.

பகரும் சொல்லும் அச்சொல்லின் பயனும் பொருளும் நன்குணர்தற்
ககரம் முதலாம் எழுத்துக்கள் அல்லா தமையா ததுபோலும்,
மகரம் திரியும் நீராழி வளையக் கிடக்கும் நிலவுலகில்
திகழும் பொருளும் மற்றெவையும் தெரிதற் காகும் கண்போலும்,

தன்னை யுணர்ந்து தலைவனையும் தானாய் உணர்ந்து நிலைபெற்றுத்
துன்னும் வீடு பேறதனைத் தோய்வான் உஞற்றும் பக்குவிகள்
பொன்னே போலும் போற்றற்காம், புனிதன் சேடாத் திரிசிவனால்
மன்னும் திருநா நாஜீவ வாதக் கட்ட ளைநூற்கு,

கரும்பில் எடுத்த கட்டியெனக் கனிந்த கதலிக் கனியென்னச்
சுரும்பி னங்கள் பண்பாடிச் சூழும் மலர்த்தீம் தேனென்ன,
விரும்பிக் கற்போர்க் கெளிதாக விண்ணின் அமுதேய் தமிழாலே
அரும், புத் திலகு போதினியென் றமையும் உரைதந் தளித்தனனே.

சீரார் கச்சிப் பதிவந்தோன், செங்குந் தர்க்கோர் குலதீபம்,
ஏரார் ஆறு முகவண்ணல் ஈன்ற குமரன், குணக்குன்றம்,
தேரார் கல்விப் பேராழி, செய்ய தருக்க வேதாந்தப்
பேரா சிரியன் செங்கல்வ ராயன் என்னும் பெரியோனே.

உ



ஆடகன்னா நின்றுறையும் அன்னமே! நின்னுடைய
பாடகமும் சீறடியும் பற்றினேன்—தேடரிய
அற்புதமே! அம்மே! அணங்கே! மணநாறும்
கற்பகமே! நாயேனைக் கா.

---

உ

கணபதி துணை.

# * நாஞ சீவவாதக் கட்டளை.

## அவதாரிகை.

---

இந்நூலாசிரியர் (ஸ்ரீசேஷாத்திரி சிவனார்) தாம் பெற்ற ஐயந்திரிபின்றிய அபரோக்ஷ அநுபவத்தை இவ்வுலகி லுள்ள சாதன சதுட்டய சம்பன்னர்களான மந்தன், மந்த தரன், தீவிரன், தீவிரதரன், என்னும் அதிகாரிகள் யாவரும் எளிதிலடைந்து ஆனந்தாதீதர்களாகுதற்பொருட்டு இருக்கு

---

* நானாவாய சீவர்களைப்பற்றிய வாதத்தை யுணர்த்தும் கட்டளையென விரியும். வாதம்-உண்மையுணரும் வேட்கையுடைய குரு சீடர்களின் வினாவிடையாய கதை; கட்டளை - முறைமை யுடையது. எனவே, நாஞ சீவவாதத்தைக் கூறி அத்தியாரோப அபவாத உத்திகளால் அத்துவித சொரூபத்தை யதிகாரிக்கு விளக்கும் முறைமையுடைய நூல் என்பது கருத்து. ஏக ஜீவவாதத்தைக் கூறின் பந்தமோக்ஷ விவஸ்தை (பாகுபாடு) எங்ஙனம் உண்டாகும்? என, மந்த அதிகாரிக்கு ஐயப்பாடுண்டாகுமன்றோ! அதைநீக்குவான் கருதி ஆசிரியர் நாஞ சீவவாதத்தைக் கூறினாரெனக. இதற்குச் சான்று, இந்நூலாசிரியரே "இராசதகுணம் அனேகரூபமாய்ப்பிரிந்து அவித்தைகளென்றும், சீவகாரண சரீரங்களென்றும், சொல்லப் படுவனவாய், ஒன்றற்கொன்று தாரதம்மிய முள்ளவைகளாய் இருக்கும். இவ்வவித்தைகளிடத்திலும் மலினசலப் பிரதிவிம்பம் போலப் பிரமப்பிரதிவிம்பமுளவாம். இப்பிரதிவிம்ப சைதன்னியங்கள்................................................................"எனவும்,

முதலிய நான்மறைகளுட் சாம மறையின் முடிவாய சாந்தோக்கிய உபநிடதத்திற் கூறப்பட்ட தத்துவமசி மகா வாக்கியத்தின் அரும்பொருளை அத்தியாரோப அபவாத

---

" தத்துவம் (36)ல் பூதம் (5) மாயை (1) மாயாப்பிரதிவிம்பரான ஈசுவரன் (1) பிரஹ்மம் (1) ஆகிய இந்த எட்டும் சகலப் பிராணிகட்குஞ் சமுதாயமாக அனுபவிக்கப்படும். எங்ஙனமெனின், சகலர்க்கும் பிருதிவி இறக்கில் ஆதாரமில்லை. அப்பு விறக்கில் குளிர்ச்சியில்லை. தேயு விறக்கில் பாகமில்லை. வாயு விறக்கில் பிராணனியக்கமில்லை. ஆகாய மிறக்கில் அவகாசமில்லை மாயையும் மாயாப்பிரதிவிம்பரு மிறக்கில் சகல சமயங்கட்குந் தெய்வமில்லை. பிரஹ்மமில்லையாயின் சகலர்க்கும் அறிவில்லை. ஆதலால் இந்த எட்டும் எல்லோருக்குஞ் சமுதாயமாம. மற்றைய (28) தத்துவங்களும் அவனவனுக்குப் பிருதக்காக அனுபவிக்கப்படும் அஃதெதனாலெனின் ஒருவனுக்குத் தூல சரீர மிறக்கில் எல்லோருக்கு மிறவாதபடியினாலும், சூட்சும சரீரத்தில் ஒருவனுக்கு அங்க வைகல்யம் வந்தால் எல்லோருக்கும் வராதபடியினாலும், முத்தராயிருந்த சுகர் வாமதேவராதியர்கட்கு அவித்தையும் சீவனுமிறந்துபோயிருக்க மற்றையர்க்கெல்லா மிறவாதபடியினாலும் இவ்விருபத்தெட்டுத் தத்துவங்களும் பிருதக்கென்பதிற் சந்தேகமில்லை." எனவும் கூறுதலேயாம்.

அந்தக்கரணம் அல்லது அஞ்ஞானமென்னும் உபாதி பலவெனவும், அவை பலவாதலின் சீவனும் பலவெனவும் சுருதி முதலியன கொண்டுரைப்பது நானா சீவவாதமெனவும், அஞ்ஞானமென்னும் உபாதி ஒன்றே எனவும், அஃது ஒன்றாதலின் ஜீவனும் ஒன்றே எனவும் சுருதி முதலியன கொண்டுரைப்பது ஏக ஜீவவாதமெனவும் தத்துவானு சந்தான முதலிய நூல்களில் வருவதுணர்க.

இதற்கு (இந்நூலின் பெயருக்கு) நான் கர்த்தா போக்தா ஞாதா வென்னும் நானாவித சீவபேத வேறுபாடுகளை நான் அகர்த்தா அபோக்தா அசங்கன் சின்மாத்திரனென்னும் தத்துவ ஞானத்தினால் வாதித்து ஏக வடிவா யிலங்கும் வத்துவைத் தெரிவிக்கும் முறைமையை யுடையது எனவும் பொருள்கூறுப.



முறைமையாக இந்நூலினிற் கூறுகின்றார்.

## நூல்.

*** சுத்தப் † பிரமமா யிருக்கின்ற ... ... ...**

---

* சுத்தம்-அநாத்மதர்மங்களின் தாதான்மியமற்றது ; எனவே விருப்பு வெறுப்பு முதலிய விகாரங்களில்லாமையே பிரமத்தினிடத்துள்ள சுத்தத்தன்மை என்பது கருத்து. அல்லது சகசீவபரமென்று முப்பத்தைந்து தத்துவங்களுக்குள்ள அசுத்தமின்றியது இங்குத்தூல சரீர தத்துவம் 6, சூட்சும சரீர தத்துவம் 20, பூதம் 5, சீவன் அவித்தை 2, ஈசுவரன் வித்தை (மாயை) 2, எனத் தத்துவம் 35 என்றும், நவத்துவாரங்களிலும் மலம் ஒழுகிக் கொண்டிருத்தலையுடைமையே ஆறு தத்துவமாயிருக்கும் தூல சரீரத்திற்கு அசுத்தமென்றும், இராகம் துவேடம் முதலிய பதின்மூன்று குணங்களையுடைமையே இருபது தத்துவமாயிருக்கும் சூட்சும சரீரத்திற்கு அசுத்தமென்றும், மலம், மூத்திரம், குப்பை, மயான முதலியவற்றையுடைமையே பூதம் ஐந்தனுள் பிருதிவிக்கு அசுத்தமென்றும், அலை, திவலை, குமிழி, நுரை, சேறு, பாசி முதலியவற்றையுடைமையேஅப்புவிற்குஅசுத்தமென்றும், புகை, பொறி, வெம்மை முதலியவற்றை யுடைமையே தேயுவிற்கு அசுத்தமென்றும், சலனம் (அசைவு), நறுநாற்றம், தீநாற்ற முதலியவற்றைப் பரப்புதல் முதலியவற்றையுடைமையே வாயுவிற்கு அசுத்தமென்றும், இடி, குமுறல், மின்னல், மேகபடல முதலியவற்றையுடைமையே ஆகாயத்திற்கு அசுத்தமென்றும், சாதி (மானுடத்தன்மை முதலிய சாதி), வருணம் (பிராமணத்தன்மை முதலிய சாதி), ஆச்சிரமம், தருமா தருமம், அதன் பயனாயுள்ள சுவர்க்கம், நரகம், அனந்தகோடி ஜனன மரணாதி சமுசாரத்திற் றொடக்குற்றலைதலையுடைமையே சீவனுக்கு அசுத்தமென்றும், அதிட்டானத்தை மறைத்தலும், தத்துவ ஞானம் தோன்றுழிக்கெடுதலும் உடைமையே அவித்தைக்கு அசுத்தமென்றும், சிருட்டி முதலிய ஐம்பெருங்கிருத்தியமுடைமையே ஈசுவரனுக்கு அசுத்தமென்றும், சங்கோச (குவிதல்) விகாச (விரிதல்) தருமமுடைமையே வித்தைக்கு அசுத்தமென்றும், 35 தத்துவங்களுள் ஒன்றும் தானாகா (பிரமமாகா)மையின் இது இவைகட்குள்ள அசுத்தங்களின்றியதென்றும் உய்த்துணர்க.

† பிரமம் - பெரிதிற்கெல்லாம் பெரிதாயிருப்பதும் சிறிய வஸ்துக்களையெல்லாம் பெரிதாகச் செய்வதுமாய வஸ்து. இங்கு " எத

‡ சர்வசாக்ஷியினிடத்தில் ... ... ... ... ... ...

---

னால்பெரிதாகின்றதோ எல்லாவற்றையும்பெரிதாக்குகின்றதோ அதனால். மேலான பிரமமென்று கூறப்படுகின்றது" என்று சாண்டில் யோபநிடதம் கூறுகின்றமை காண்க. இஃது (இவ்வஸ்து) ஒன்றையே பெரிதுக்கெல்லாம் பெரிதா யிருப்பதாலும், சிறியதைப் பெரியதாகச் செய்வதாலும் வேதாந்திகள் பிரமமென்றும், காந்திரூபமாயிருத்தலாலும், மங்கல வடிவமா யிருத்தலாலும், சைவர்கள் சிவமென்றும் வியாபகரூபமாயிருத்த லால் வைணவர்கள் விஷ்ணுவென்றும் கூறுவர்.

‡ சர்வசாக்ஷி என்பது சர்வத்தையுர் உணரும் சாட்சி என விரியும். சர்வம்-பிரமாதா (அந்தக்கரணவிசிட்ட சைதன்னியம்), பிரமாணம் (பிரமா ஞானத்திற்குக் கருவியாயுள்ளது), பிரமேயம் (பிரமாஞானத்திற்கு விடயமாயுள்ளது). இதற்குத் தத், துவம், அசி என்னும் பதத்திரய வாச்சியார்த்த சமூகமெனவும் பொருள் கூறுவர். இங்கு விராட்டு, இரணியகருப்பம், அவ்வியாகிருதம் என்னுஞ் சரீரத்திரயமும், வைசுவானரன், சூத்திராத்மா, அந்தர்யாமி என்னும் அபிமானித்திரயமும், சிருட்டி, திதி, சங்கார மென்னும் அவத்தாத்திரயமும், பிரமமுமாயபத்தும் தத் பதத் திற்கு வாச்சியம் ; கேவலம் பிரமம் இலட்சியமெனவும், தூலம், சூக்குமம், காரணமென்னும் சரீரத்திரயமும், விசுவன் தைசசன், பிராஞ்ஞன் என்னும் அபிமானித்திரயமும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் அவத்தாத்திரயமும், கூடஸ்தனுமாய பத்தும் துவம் பதத்திற்கு வாச்சியம் ; கேவலம் கூடத்தன் இலட்சியம் எனவும், சத்துரூபசத்தி, சித்துரூபசத்தி, ஆனந்தரூபசத்தி என் னும் சரீரத்திரயமும், பரிபூரணன், தேஜோமயன், பரமானந்தன் என்னும் அபிமானித்திரயமும், சர்வவியாபகம், சர்வப்பிரகாசம், சர்வானந்தமென்னும் அவத்தாத்திரயமும், சுத்தப்பிரமமுமாய பத் தும் அசி பதத்திற்கு வாச்சியம் ; கேவலம் சுத்தப்பிரமம் இலட்சிய மெனவும் கொள்க.

சாக்ஷி-விகாரமற்று உதாசீனமாயிருந்து சர்வத்தையுமுணரும் சைதன்னியம். உலகின்கண் வாதிப்பிரதிவாதிகட்கு வேறான வனும், அவ்விருவரது கக்ஷிகளை நன்கு அறிபவனும், பக்ஷபாத மற்றவனுமாகிய புருஷன் சாக்ஷி எனப்படுவான். அதுபோல் பக்ஷபாதமின்றிச் சர்வத்தையு முணருஞ் சைதன்னியம் சாக்ஷி எனப்படும்.



¶ அக்கினியிற் சூடு போல அபின்னமாக ஒரு சத்தி யுண்டு ; அந்தச்சத்தி அவ் $ வதீதப் பிரமத்திலடங்கி யிருக் கும்போது அதற்குச் ‖ சுத்தப்பிரமமென்று பெயர்.

---

¶ அக்கினியிற் சூடுபோல-அக்கினியிற் சூடு அபின்ன (அபேத) மாக இருத்தல்போல. ஈண்டுச் சூட்டைவிட்டு அக்கினி ஒருபோது மிராமையின் சூடு அக்கினியின் சொரூபமாக இருத்தல்போன்று பரையைவிட்டுப் பிரமம் ஒருபோது மிராமையின் பரையும் பிரமத்தின் சொரூபமாக (அபின்னமாக) உளதென்பதும், சூடு அக்கினியின் குணமென்பர் தருக்கர் ; சொரூபமென்பர் வேதாந்த சித்தாந்த முணர்ந்தோர் ; இவ்விருவரும் சூட்டைத் தாகசத்தி எனக்கொள்ளார் ; சூடு வேறு, தாகசத்தி வேறு என்பர் என்பதும், இந்நூலாசிரியர் பின்னர் மூலப்பிரகிருதி என்னும் சத்தியைப் பிரமத்தினும் பின்னமன்று என்பதும், பின்னமன்மையின் மித்தையா மென்பதும் உணர்த்த 'சுத்தியில் ரசதம்' என்னும்உவ மானங்காட்டினாரென்பதும், இங்குப்பரை பிரமத்தில் அபின்னமாக உளதென்பதும், அபின்னமாயிருத்தலின் மித்தையன்றென்பதும் உணர்த்த அக்கினியிற் சூடுபோல என்னும் உவமானங் காட்டினார் என்பதும், இவ்வாறு கூறுவது சில நூலாசிரியர் கொள்கை என்பதும் உய்த்துணர்க.

$ அதீதம்-சாதி, குணம், தொழில், சம்பந்தம் என்னும் நான்கு மின்மையின் வாக்கையும், அதிருசியமாயும் சுயஞ்சித்தாயுமிருத்த லின் மனத்தையும் கடந்தது. அதி + இதம் = அப்பாற் போனது.

‖ இந்த நிலையினைத் துரியாதீத நிலை என்பர்.

அந்தச்சத்தி விசிரிம்பித்துச் (விரிந்து) சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது (சூழ்ந்துகோள்ளும்போது), அப்பிரமம் * பரையின் வியாபகத்துள்ளிருந்தபடியால் அதற்குப் § பரப்பிரமமேன்று பேயராம்.

† இலக்ஷண சூனியமாயிருக்கின்ற இந்தச் சத்திக்குப் பிரம சந்நிதானத்தில் புருட (தலைவன்) சமுகத்தில் (சந்நிதானத்தில்) ஸ்திரீக்கு (தலைவிக்கு) இன்பஞ் சனித்தாற் போல அவிகிருத (விகாரப்படாத) சத்துவ ரஜோ தமோ குணங்களுண்டாயின. இவற்றுள், ‡ சுத்த சத்துவத்திற்கு

---

* 'பரையின்'-பரையினது என ஆறனுருபுவிரிக்க. அபின்ன சத்தி, பராசத்தி, அருட்சத்தி, சிற்சத்தி சொரூபசத்தி என்பன ஒரு பொருட் கிளவி.

§ இந்த நிலையினைத்துரிய நிலை என்பர்

† இலக்ஷண சூனியமாயிருக்கின்ற-பிரமத்தின் இலக்கணத்தினும் வேறு வகையான இலக்கணமின்றியதாயிருக்கின்ற. எனவே பிரமத்தின் இலக்கணமே பராசத்தியின் இலக்கணமா மென்பது கருத்து. பிரமத்தின் இலக்கணம் தடத்தமெனவும், சொரூபமெனவும் இருவகைப்படும். அவை முறையே ஆக்குந்தன்மை, அளிக்குந்தன்மை, அழிக்குந்தன்மையும், சத்துச் சித்து ஆனந்தமுமாம். அல்லதுஇலக்ஷணமென்னுஞ் சொல்லிற்கு வடிவமென்று பொருள் கொண்டுபிரமத்தினும் வேறு வகையான வடிவமின்றியதா யிருக்கின்ற என்று பொருள் கூறினும் அமையும்.

‡ பிரகிருதியின் குணங்களல்லாமையானும், பிரமத்தின் சுத்த விலக்கணத்தை யுணர்த்துகின்றமையானும், இங்கு இவற்றை (சத்துவ முதலிய மூன்றையும்) சுத்தமென்றனர். இவரே பின்னர்ப் பிரகிருதியின் குணங்கள் மூன்றையும் முறையே சுத்தம், அழுக்கு, இருட்டு என்று குறிப்பானுணர்த்தினமையும் உய்த்துணர்க. அன்றி யும், அத்துவித ஆனந்த இலக்கணத்தையும், சுயம்பிரகாச சித்திலக்கணத்தையும், வியாபகசத்திலக்கணத்தையும் அவ்வவ் வடிவமாயிருந்து விளக்கலின் பரையின் முக்குணங்களையும் முறையே ஆனந்தரூபசத்தி எனவும், சித்துரூபசத்தி எனவும், சத்துரூபசத்தி எனவும் கூறினரென்பதும் உணர்க.



** ஆனந்தரூபசத்தி (இன்பவடிவசத்தி) யேன்றும், சுத்த ரஜசிற்குச் ‡‡ சித்துரூபசத்தி (ஒளிவடிவசத்தி) யேன்றும், சுத்ததமசிற்குச் †† சத்துரூபசத்தி (உண்மைவடிவசத்தி) யேன்றும் பேயர்.

இவற்றுள், * காரணமான ஆனந்தரூபசத்தியோடு பரப்பிரமங்கூடிச் † சர்வானந்தமேன்னுஞ் ‡ சுழுத்தியவத்தையை யடைகின்றபோது அதற்குப் பரப்பிரமமேன்கிற பேயர்போய் பரமானந்த (மேலான இன்பவடிவின) ரேன்கிற பேயர் வந்தது.

இந்தப்பரமானந்தர் சித்துரூபசத்தியோடு கூடிச் $ சர்வப்பிரகாசமேன்னுஞ் § சோப்பனவத்தையை யடைகின்ற

---

** இது சிவ காரண சரீரமாம்.

‡‡ இது சிவ சூட்சும சரீரமாம்.

†† இது சிவ தூல சரீரமாம்

* காரணம்-சாக்கிர சொப்பனங்கட்குச் சுழுத்தி காரணமானமையின் சுழுத்தியவத்தை வடிவ ஆனந்தரூப சத்தியைச் சத்துரூபசத்தி, சித்துரூபசத்திகட்குக் காரணமென்றார்.

† சர்வானந்தம்-எறும்பு முதல் பிரமனீறாகவுள்ள எல்லா ஆன்மாக்களும் நுகரும் ஆனந்தம்யாவும் எந்த ஆனந்தத்தின் துளிகளோ அந்த ஆனந்தம் சர்வானந்தம்.

‡ இது அசிபதப் பொருளாய சிவ சுழுத்தி.

$ சர்வப்பிரகாசம் - எந்தப்பிரகாசத்தினால் சூரியன் முதலிய பிரகாசங்கள் பிரகாசிக்கின்றனவோ அந்தப் பிரகாசம் சர்வப்பிரகாசம்.

§ இது அசிபதப் பொருளாகிய சிவ சொப்பனம்.

போது அவருக்குப் பரமானந்த ரேன்கிற பெயர்போய்த் தேஜோமய (சோதிவடிவின) ரேன்னும் பெயர் வந்தது.

இந்தத் தேஜோமயர் சத்ருபசத்தியோடு கூடிச் || சர்வ வியாபக மேன்னுஞ் ‡ சாக்கிராவத்தையை யடைகின்ற போது அவருக்குத் தேஜோமயரேன்னும் பெயர் போய்ப் பரிபூரண (எங்கும் நிறைந்தவ) ரேன்னும் பெயர் வந்தது.

---

|| சர்வ வியாபகம்—எந்த வியாபகததால் ஆகாய முதலானவை வியாபகங்கள் ஆயினவோ அந்த வியாபகம் சர்வ வியாபகம்.

‡ இது அசி பதப்பொருளாகிய சிவ சாக்கிரம். இதுவும், முன்கூறிய சிவசொப்பனம் சிவசுழுத்தி என்னு மிரண்டு அவத்தைகளும் விவேகம் முதலிய சாதனம் நான்கும் பெற்ற அதிகாரி, சிரவணம் (கேள்வி), மனனம் (சிந்தித்தல்), நிதித்தியாசனம் (தெளிதல்) என்பவைகளைச்செய்து நிட்டையேவி, உள்ளங்கை நெல்லிக்கனிபோல அகண்ட ஏகரச ஆனந்த பிரமத்தை அனுபவிக்கின்ற நிலைகளின் வேறுபாடுகளாம். இவற்றின் விளக்கத்தைப் பின்வரும் சசிவன்ன போதச் செய்யுட்களின் உரைகளைக்கொண் டுணர்க.

" இறையெனும்பொருட் டெரியமே யென்னை யாண்டவனே
மறையினந்தநற் பதப்பொரு ணனவென மதித்தேன்."

" பண்டைவிச்சுவ வாதனைப் பழுதுபோய் முழுதுங்
கண்டகண்ணதே யாகிய கனவதுங் கண்டேன் "

" காட்சியாவையுங் கண்ணதா யக்கணுங் கரைந்த
மாட்சியாகிய வகோசர முறக்கமாய் மதித்தேன்."



இந்த * அகண்ட ... ... ... ...

---

* பிரமத்தின் உபதேசம் விதிமுகமெனவும், நிடேதமுக மெனவும் இருவகையாம். அவற்றுள், விதிமுகமென்பது பிரமம் பரிபூரணமெனவும், சத்தெனவும், சித்தெனவும், ஆனந்தமெனவும் உபதேசிக்கும் உபதேசமாம். நிடேதமுகமென்பது பிரமம் அகண்டமென உபதேசிக்கும் உபதேசமாம். இலக்கணை முதலியவற்றைத் துணையாக்கொண்டு உபதேசிக்கும் விதிமுக உபதேசத்தினும், அவற்றைத் துணையாக்கொள்ளாது உபதேசிக்கும் நிடேதமுக உபதேசம் சிறந்துளதாதலின், அகண்டமென முன்னர் உபதேசித் தனர் போலும்.

ஈண்டு அகண்டம் = கண்டமின்றியது. இதனிலக்கணம் :— தேயத்தானும், காலத்தானும், வத்துவானும்அந்தமின்றியது. உடல் முதல் மூலப் பிரகிருதி யீறாகக் கூறுவனவற்றுள், ஒவ்வொன்றும் உடலின் கண்ணுள்ள மச்சம்போல ஒரு தேயத்திருந்து மற்றொரு தேயத்திராமையானும், குடம் போன்று ஒரு காலத்திருந்து ஒரு காலத்திராமையானும் குடம் படம் போன்று ஒன்று மற்றொன்று அன்மையானும் கண்டமாம் ; பிரமம் அவ்வாறின்றி வியாபகமாதலானும்,நித்தியமாதலானும், எல்லாமாயிருத்தலானும் அகண்டமாம்.

வேதாந்தசித்தாந்தத்தில் தேயத்தானந்தமின்றியது, அல்லது காலத்தானந்தமின்றியது, அல்லது வத்துவானந்தமின்றியது அகண்டமென ஒவ்வொன்று கூறலே போதியதாயினும் பிறமதத்து வரும் குற்றம் நீக்குவான் கருதி இம்மூன்றும் வேண்டப்பட்டன. நையாயிகன் அங்கீகரித்துள்ள பிருதிவியாதி பரமாணுக்களில் அதிவியாப்தி நீக்குவான் கருதி தேயத்தானந்தமின்றிய தெனவும், ஆகாய முதலியவற்றின் அதிவியாப்தி நீக்குவான் கருதி வத்துவானந்தமின்றிய தெனவும் கூறப்பட்டன.

† நீரினாற் பூரிக்கப்பட்ட குடம்போல அன்னமயகோசம் பிராணமயகோசத்தாற்பூரிக்கப்பட்டுளது; பிராணமயகோசம் மனோமய கோசத்தாற் பூரிக்கப்பட்டுளது; மனோமயகோசம் விஞ்ஞானமய கோசத்தாற் பூரிக்கப்பட்டுளது; விஞ்ஞானமய கோசம் ஆனந்தமய கோசத்தாற் பூரிக்கப்பட்டுளது. அன்றியும் இவை யாவும் சீவனாலும் பூரிக்கப்பட்டன. இங்ஙனம் பூரிக்கப் பட்டனவாகிய ஐம்பெருங் கோசங்களால் ஐம்பெரும் பூதங்கள் பூரிக்கப்பட்டுள்ளன; இவ்வைம்பெரும் பூதங்களால் உலகு பூரிக் கப்பட்டுளது; இவ்வுலகு எங்கும் வியாபித்துள்ள மாயா விசிட்ட ஈசுவரனாற் பூரிக்கப்பட்டுளது; இத்தகைய ஈசுவரனும் பிரமத்தாற் பூரிக்கப்பட்டுளன்; இத்தகைய பிரமத்தைப் பூரிப்பது வேறொன்று மின்மையின் பிரமமே ஈண்டுப் பரிபூரணம் எனப்பட்ட தென்க.

‡ சச்சிதானந்தம் :-சத்து + சித்து + ஆனந்தம். சத்து, கயிற் றரவுபோல ஞானத்தானும், புற்றரவுபோல மற்றொன்றானும் (தடி கொண்டடித்தல் முதலிய கிரியையானும்) நிவிருத்தி இன்றியது. இங்கு, "சத்து—அதாவது இருப்பது என்று கேட்கப்படும் உணர்ச்சிக்கு லக்ஷியமாயுள்ளது சத்தியமாம். அல்லது அசத்து என்று சொல்லக்கூடாதது சத்தியமாம். அல்லது மூன்று காலத்தி லும் பாதிக்கப்படாதது அதாவது பொய்யென்று நிச்சயிக்கப் படாதது சத்தியமாம். அல்லது மூன்று காலத்தும் கலந்திருப் பது அதாவது வியாபித்திருப்பது சத்தியமாம். அல்லது எது இருக்கிறதோ அது சத்தியமாம். அல்லது ஒரே அத்விதீயமாயுள் ளது சத்தியமாம். அல்லது சஜாதி, விஜாதி பேதமின்றியது சத்தியமாம். அல்லது சகல கற்பனைக்கும் அதிஷ்டானம் சத்திய மாம்." என்று சர்வசாரோபநிடதங் கூறுவது காண்க.

சித்து = குன்றாத வொளி; அல்லது சூரியன், சந்திரன். நக்ஷத்திரம், அக்கினி. மின்னல், சத்தம். இந்திரியம், புத்தி, சீவன் ஆகிய நவப்பிரகாசங்களையும் அபேக்ஷியாமல் சுயம்பிரகாசமா யிருந்துகொண்டு சகல பிரபஞ்சங்களையும் விளக்குவது. இங்கு "அது சுத்தமும் ஜோதிக்கெல்லாம் ஜோதியாயுமுள்ளது" என் னும் முண்டக சுருதியும், "சுவப்பிரகாசம ஞானமாம். எல்லா





வற்றையும் பிரகாசிப்பது ஞானமாம்; ஆவரணமின்றிய சின்மாத்தி ரம் ஞானமாம்; அநாதி அநந்தமாய் நிரந்தரம் விருத்தியின்றிய விடத்திருக்கும் சாக்ஷி சைதன்னியமே ஞானமாம்." என்னும் சர்வசாரோபநிடதமும் ஆத்மாவின் (பிரமத்தின்) சித்து வடிவத் திற்கு இலக்கணம் கூறுதல் காண்க.

ஆனந்தம் - மிகுந்த பிரியத்திற்கு விஷயமாயது. இங்கு "யானே ஆனந்தம்; பிறிதல்லன்; பிறிதாயின். அது சுகமேயன்று. பிரியம் என்பொருட்டாகாததன்று; என்பொருட்டுமன்று; தானே பிரியமாம். முனீசுவாரே! மேலான பிரியத்திற்கு விஷயமாந்தன்மை யால் 'நான் இல்லாதிருக்கலாகாது, எப்போதுமிருக்கவேண்டும்.' என்று எது காணப்படுகின்றதோ அந்த நான் விஷ்ணு" என வராகோபநிடதமும், "நீருக்குச் சமுத்திரம்போலச் சுக சேதனங் களுக்கு அதிஷ்டானமான நித்திய சுத்த அகண்டாத்வைதசிதா நந்தைகரசம் ஆனந்தமாம்." எனச் சர்வசாரோபநிடதமும் கூறு கின்றமை காண்க. வேதமுணர்ந்தவர்களுட் சிலர், சாத்திர திருஷ்டியை யங்கீகரித்துச் சத்திய வடிவம் பிரமம், சித்து வடிவம் பிரமம் ஆனந்த வடிவம் பிரமமென மூன்று இலக்கணம் பிரமத் திற்குக்கூறுவர். வேதமுணர்ந்தவர்களுட் சிலர் உலக திருஷ்டியை யங்கீகரித்துச் சத்துச்சித்து ஆனந்தரூபம் பிரமம் என ஒரே இலக்க ணத்தைப் பிரமத்திற்குக்கூறுவர். உலகதிருஷ்டியை அனுசரித்துச் சத்துரூபம் பிரமமென இத்துணையே பிரம இலக்கணங் கூறின், நையாயிகர் சத்தாசாதியுடைய திரவிய குண கரும மூன்றையும் சத்தியமென்பர் அவற்றின் கண்ணும், பிரமத்திற்குப் பாரமார்த்திக சத்தையும், ஆகாசாதி பிரபஞ்சத்திற்கு வியாவகாரிகசத்தையும், சுத்தி ரசத முதலியவற்றிற்குப் பிராதிபாசிகசத்தையும் கூறும் வேதாந்த மதத்தை யனுசரித்து வியாவகாரிகசத்தையுடைய ஆகாச முதலிய பதார்த்தங்களிலும் அதிவியாப்தியாம். சித்து ரூபம் பிரமமென இத்துணையே பிரமத்திற்கு இலக்கணங்கூறின், நையாயிகர் அங்கீகரித்த ஞானகுணத்தின் கண்ணும், அதிவியாப்தி யாம். ஆனந்தரூபம் பிரமமென இத்துணையே பிரமத்திற்கு இலக்கணங்கூறின், விஷயானந்தத்திலும். நியாயமதப்படி ஆத்மா வின் ஆனந்த குணத்திலும் அதிவியாப்தியாம். ஆதலின், இம் மூன்றுங்கூடியது பிரமத்திற்குத் தோஷமின்றிய இலக்கணமாம்.

¶ இங்கு, சூனியவாதிகளுட் சிலரும், தாந்திரீகர்களுட் சிலரும் 'சுத்தியின்கண் வெள்ளியில்லையெனவும், அவ்வில்லாத வெள்ளியே இது 'வெள்ளி' என்னு முணர்விற்கு விஷயமாமெனவும்,' கூறுவர். இதனையே அசத்கியாதி என்பர். வைணவர் முதலியோர் 'சுத்தியின் அவயவத்தோடு வெள்ளியின் அவயவமும் கலந்துளதெனவும், சுத்தியின் அவயவம் எங்ஙனம் உண்மையோ அங்ஙனம் வெள்ளியின அவயவமும் உண்மையெனவும், அவ் வெள்ளியே சுத்தியை உணராதபோது வெளிப்பட்டுச் சுத்தியின் கண் தோன்றுகிறதெனவும், சுத்தியை உணர்ந்தபோது தனது அவயவத்தில் ஒடுங்குகிறதெனவும்' கூறுவர். இதனையே சத்கியாதி என்பர். க்ஷணிகவிஞ்ஞான வாதியராய யோகாசாரர் 'உடலகத்துள்ள கணந்தோறும அழியும் விஞ்ஞானமே (புத்தியே) ஆன்மா எனவும், அவ்வான்மாவினும் வேறாக யாதொரு பொருளும் அகத்தும் புறத்துமில்லை எனவும், ஆனால் உடல் முதலான எவ்வெப் பொருள் ... அவ்வான்மாவின் வடிவவிசேடமெனவும், சுத்தியின் கண் தோற்றும் வெள்ளியும் உடலகத்துள்ள விஞ்ஞான ஆத்மாவின் தருமமெனவும் உடலகத்திருக்கும் வெள்ளியே குற்றத்தின் வலியால் புறத்ததுபோலச்சுத்தியின்கண் தோற்றுகின்றதெனவும்' கூறுவர். இதனையே ஆத்மக்கியாதி என்பர்.

தருக்கர்களுட் பழையோர் 'இது வெள்ளி யென்னு முணர்ச்சிக்கு விஷயமாகிய வெள்ளி, எதிரே தோற்றும் சுத்தியின்கண் இல்லையெனவும், ஆனல் காசுக்கடை முதலிய வேறு தேயத்தே உளதெனவும், அவ்வெள்ளியே குற்றநோக்குடையவனுக்குச் சுத்தியின்கண் காணப்படுகின்றதெனவும்' கூறுவர். இதனையே அந்நியதாக்கியாதி என்பர்.

தருக்கர்களுட் புதியர் (சிந்தாமணிகாரர்) 'குற்றநோக்குடையவனுக்குச் சுத்தி தன் வடிவத்தோடு விளங்குவதில்லையெனவும், ஆனல், வெள்ளி வடிவமாக விளங்குகிறதெனவும்' கூறுவர். இங்கு விஷயம் சுத்தி; ஞானம் வெள்ளியுணர்ச்சி யென்றறிக. இதனையே மற்றொரு வகையான அந்நியதாக்கியாதி என்பர்.



A. No. 17692
LIBRARY, KOVIL

மீமாஞ்சகர் முதலியோர் 'உணர்ச்சி யாவும் மெய்யே எனவும், ஒருணர்ச்சியும் பொய்யன்றெனவும், மயக்குணர்வு உண்டாமிடத்து விசிட்டஞானமில்லையெனவும், இது வெள்ளியென்னும் அம்மயக்குணர்வில் இதுவென்னுங்கூறு எதிருற்ற சுத்தியின் காட்சி ஞானமெனவும், வெள்ளியென்னுங்கூறு காசுக்கடை முதலிய தேயத்தே கண்ட வெள்ளியின் ஸ்மிருதி ஞானமெனவும், கூறுவர். இதனையே அக்கியாதி என்பர்.

வேதாந்த சித்தாந்திகள் 'சுத்தியின்கண் இல்லாத வெள்ளி தோற்றுமாயின், அதுபோல இல்லாத மலடி மகனும் தோற்றவேண்டுமெனவும், சுத்தியின்கண் உண்மையான வெள்ளியுளதாயின், அதைத் தீயின்கட்பெய்தால் சுத்திசாம்பராய்ப் போக வெள்ளி மிஞ்சவேண்டுமெனவும், கணந்தோறுமழியும் விஞ்ஞானமே வெள்ளியாய்த் தோற்றின் கணத்திற்குமேல் அவ்வெள்ளி தோற்றக்கூடாது. ஆனல் அனுபவத்தில் மயக்கவுணர்ச்சியுள்ளளவும் அது தோற்றுகின்றதெனவும், காசுக்கடை முதலிய தேயத்தேயுள்ள வெள்ளியே சுத்தியின்கண் தோற்றுமாயின் அவ்வாறு மற்ற பொருள்களும் (துலாக்கோல் முதலியனவும்) தோற்றவேண்டுமெனவும், சுத்தியே வெள்ளியாகத் தோற்றுமாயின் ஞானத்தின் நிமித்தமாய ஞேயத்தை யனுசரித்தே ஞானம் உண்டாகுவதல்லது ஞேயம் சுத்தியாயிருக்க ஞானம் வெள்ளியினதாக உண்டாகமாட்டாதெனவும், இது வெள்ளியென்னுமிடத்து வெள்ளியின் நினைவுளதேல், வெள்ளியை விரும்புவோன் ஆங்கு (எதிரில்) அவ்வெள்ளியை எடுக்க முயலுதல் கூடாதெனவும், உட்கொண்டு உண்மையாய வெள்ளியின் அனுபவத்தால் பிறந்த வாசனையுடையானது கட்பொறிக்கு எதிருற்ற சுத்தியோடு சம்பந்தமுண்டாம்போது அக்கட் பொறிவாயிலாய் வெளிப்போந்த அந்தக்கரண விருத்தி அச்சுத்தியின் இதுவென்னும் வடிவமாயும் இடைவிட்டொளிர்தல் வடிவமாயும் ஆம். அவ்விடைவிட்டொளிர்தலின் ஒப்புமைக் காட்சியான் முன் கண்ட வெள்ளியின் வாசனை வெளியாக (வெளிப்பட) அதனைத் துணையாகவுடைய இஃதென்னுங் கூற்றான் வரைந்துகொள்ளப்பட்டதும், சுத்தித்தன்மை கருமுதுகுடைமை, மூவலய (முக்கோண) முதலிய விசேடக்கூற்றை மறைத்துள்ளதுமாய அவித்தை கலக்கமுற்றதாய் (காரியோத்பத்தியின் எதிர்முக நிலையடைந்ததாய்) வெள்ளி

... ... ... ... ... ... ...

யாயும், வெள்ளியை விடயஞ்செய்யும் ஞானமாயும் பரிணமிக்கின்றது என்பர். இவ்வாறு அவித்தையின் பரிணாமமாய வெள்ளியும் அதன் ஞானமும் உள்ளது மல்ல; இல்லதுமல்ல; ஆனால், இவற்றின் வேறாய அத்தியாசமாம் (மித்தையாம்). இதனையே அநிர்வசனீயக் (இத்தன்மையதென்று உறுதியாய்ச் சொல்ல முடியாத) கியாதி என்பர். சுத்தியில் வெள்ளி அத்தியாசம் என்பதற்கும், பிரமத்தில் மூலப்பிரகிருதியென்னும் சத்தி அத்தியாசம் என்பதற்கும் "அவ்வத்விதீயப்பிரமத்தில் கானல், சுத்தி, தாணு, படிக முதலியவற்றில் நீர், வெள்ளி, புருஷன் இரேகை, முதலியவற்றைப் போல வெண்மை செம்மை கருமை யென்னும் குணமயமானதும், குணசாம்மியமும், அநிர்வாச்சியமுமான மூலப்பிரகிருதி இருந்தது" என்னும் பைங்கல சுருதியும், மற்றக்கோபாலதாபநீயம், வராகம், நிராலம்பம், சர்வசார முதலிய சுருதிகளும் பிரமாணமாதல்காண்க

அத்தியாசம் – ஒன்றன்கண் (சுத்தியின்கண்) மற்றொன்றன் (வெள்ளியின்) அவபாசம் (தோற்றம்). ஞானாத்தியாச அர்த்தாத்தியாச பேதத்தால் அவ்வத்தியாசம் இருவகைத்து. ஞானாத்தியாச பக்ஷத்தில் அவபாச பதத்தாற் பிராந்தி ஞானத்தைக் கொள்க அர்த்தாத்தியாச பக்ஷத்தில் அவபாச பதத்தால் பிராந்தி ஞானத்திற்கு விஷயமான வெள்ளி முதலிய பொருள்களைக் கொள்க. ஞானாத்தியாசமாவது, அத்தர்மரகித பதார்த்தத்தில் அத்தர்மமுடைய புத்தி. உதாரணம் :-வெள்ளித்தன்மையில்லாத சுத்தியின்கண் வெள்ளித்தன்மைப் புத்தியும், ஆன்மத்தன்மையில்லாத ஆகத்தின்கண் ஆன்மத்தன்மைப் புத்தியுமாம்.



$ மூலப்பிரகிருதி என்னும் ஒரு சத்தியுண்டு. அந்தச்சத்தியும்

அர்த்தாத்தியாசமாவது பிரமாண அஜன்னிய (பிரமாணத்தாற் றோன்றாத) ஞானத்திற்கு விஷயமும் பூர்வ திருஷ்டத்துவ தருமத்திற்கு (முன் பார்த்துள்ள தன்மைக்கு) அனதிகரணமு (இடமில்லாதது) மான பொருள். சுத்தியின்கண் வெள்ளியை விஷயஞ்செய்யும் இது வெள்ளியென்னு முணர்ச்சி, அப்பிரமையானமையின் ஓர் பிரமாணத்தானும் ஜன்னியமன்று. ஆதலால், அவ்வெள்ளி பிரமாண அஜன்னிய ஞானத்திற்கு விஷயமாயும், தனது தோற்றவிற்கு முன்னில்லையாதலின் பூர்வ திருஷ்டத்துவ தருமத்திற்கு அனதிகரணமுமாயுமிருக்கின்றது. ஆகவே, அவ் வெள்ளியின்கண் அர்த்தாத்தியாசத்தன்மை யமையும். இத்தகைய அர்த்தாத்தியாச இலக்கணத்தைப் பிறவிடங்களிலும் உய்த்துணர்க. இதுபிராதீதிகம் வி[illegible]வகாரிகமென இருவகைத்து பிராதீதிகமாவது ஆகந்துக (நூல்[illegible]ர்கை) தோஷத்தாற் றோன்றும் பொருள். உதாரணம் :— [illegible]ர் எ[illegible]ில் வெள்ளி. சயிற்றரவு. இவை ஆகந்துக தோஷத்தாற் [illegible]னிற்றுவன. ஆகலின், பிராதீதிக அர்த்தாத்தியாசமேயாம். ஆகந்துக தோஷம் பிரமாத்ருதோஷம், விஷயதோஷம், கரண தோஷமென மூவகைத்து.

பிரமாத்ரு (அந்தக்கரண விசிட்ட சைதன்னியத்தின்) தோஷமாவன இராகம், பய முதலியன. விஷயதோஷமாவன சாதிருசிய (ஒப்புமை) முதலியன. கரண (பொறி) தோஷமாவன காசம், காமாலை முதலியன.

வியாவகாரிகமாவது ஆகந்துக தோஷத்தாற் றோன்றும் பிராதீதிகப் பொருள்களினும் வேறானது. உதாரணம் :—உடல் முதல் மூலப்பிரகிருதி யீறாகவுள்ளயாவும்.

$ மூலப்பிருகிருதி—காரணவடிவப் பிரகிருதி. பிரகிருதி—ஞானானந்தவடிவ பிரமத்தினது பிரதிவிம்பத்தோடு கூடிய சாத்வீக ராஜச. தாமதயென்னும் முக்குணங்களின் சாமியாவத்தை (ஏற்றத் தாழ்வின்றிச் சமமாயிருத்தல்). இம்மூலப்பிரகிருதி உள் பொருளுக்கும் இல்பொருளுக்கும் வேறாதலின். அநிர்வசநீயமும், உற்பத்தி [illegible]மையின் அநாதியுமாம். இதுவே காரணாத்தியாசமென [illegible]ல்களில் கூறப்படும்.

அந்தச் சத்தியும், விகிருத (விகாரப்படும்) சத்துவ ராஜத தாமதமாகிய * முக்குண சொரூபமாக (வடிவமாக) விரிந்து தோன்றும். அம்முக்குணங்களில் சத்துவகுணம் † மாயை யென்றும், ‡ சர்வஞ்ஞவுபாதி யென்றும், $ ஈசுவரகாரண சரீர மென்றும் சொல்லப்படும்.

---

* சத்துவம் வெண்மையென்றும், சுத்தமென்றும் கூறப்படும். ராஜதம செம்மையென்றும், அழுக்கென்றும் கூறப்படும். தாமதம் கருமையென்றும், இருளென்றும் கூறப்படும்.

† இலக்கணம்:— எது (எந்தமூலப்பிரகிருதியின் சத்துவகுணம்) தன்னுடைய ஆசிரயத்துக்கு (பற்றுக்கோட்டிற்கு—ஈசுவரனுக்கு) வியாமோகத்தை (மயக்கத்தை—திரிபுணர்ச்சியை) விளைவிக்கின்ற தில்லையோ அது (அந்த மூலப்பிரகிருதியின் சத்துவகுணம்) மாயை எனப்படும்

‡ ஈண்டுச் சர்வஞ்ஞவுபாதி என்பது சர்வஞ்ஞனுக்கு உபாதி என்றும், சர்வஞ்ஞனுடைய வுபாதி என்றும் இருவகையாகப் பொருள்படும்.

உபாதியினிலக்கணம்:— தன்றன்மையை வேறோர் பொருளின்கண் உளதாமாறு தோற்றுவிப்பதுஉபாதி. செம்பூவானது தன்றன்மையாகிய செந்நிறத்தை அண்மையிலுள்ள பளிங்கு மணியிலுளதாமாறு தோற்றுவித்தலின் உபாதியாதல்போல, மாயையும் தன்றன்மையாகிய சர்வஞ்ஞத்துவமுதலியவற்றை ஈசுவரனிடத்துத்தோற்றுவித்தலின் உபாதியாம். இவ்வாறு சீவனுடைய வுபாதியாகிய அவித்தையின் கண்ணும் உய்த்துணர்க.

$ ஈண்டு, இதற்கு ஈசுவரனது காரண சரீரமென்றுவது, ஈசுவரனுக்குக்காரண சரீரமென்றுவது பொருள் கொள்க.

---



அம்மாயையில் * நின்மல ஜலப்பிரதி பிம்பம் போலப், பிரமப் † பிரதி பிம்பம் சுலக்ஷணமாக (நல்லிலக்கணமாக-வியக்தமாக) உளது.

---

* அழுக்கின்றிய சலத்தில் சூரியப்பிரதிபிம்பம் உளதாதல் போல. இவ்வுவமையிலுள்ள நின்மல சல மென்னும் விசேடணத்தால் மாயை சுத்தசத்துவகுண மெனப் பெறப்பட்டது. சத்துவ குணத்தின் சுத்தமாவது மற்ற ரஜோதமோ குணங்களால் மலினமாகாமை.

† இங்கு இவர் பிரமத்தின் பிரதிபிம்பம் ஈசுவரனென்றமையான் பிம்படம் ஈசுவரன் என்றும், பிரதிபிம்பம் சீவனென்றும், அது சத்தியமென்றும் கூறும் பிம்பப் பிரதிபிம்பவாத முடையார் அல்லர். ஆனல், பிரதிபிம்பம் மித்தை யென்று கூறும் ஆபாச வாதமுடையார் என்க. ஆயின், ஆபாசமென்னுது பிரதி பிம்பமென்றது என்னை யெனில், ஆபாசம் என்னும் சொற்போல பிரதிபிம்ப மென்னுஞ் சொல்லும் சிறிது விளங்குதலென்னும் பொருள் தருதலானும், எதுவின் இலக்கண மின்றியதாய் எதுவைப்போற் றோன்றுவது எது வாபாசமெனப் படுவது போல பிம்பத்தின் இலக்கணமின்றியதாய்ப் பிம்பத்தைப்போலத் தோன்றும் பிரதிபிம்பம் பிம்பாபாச மென்னும் ஆபாசவிலக்கண முடைமையானும் பிரதி பிம்ப மென்றனர். இங்குப் பிம்பவடிவசைதன்னியம் அசங்கமாயும், அவிகாரியாயும் இருத்தலினுலும், பிரதிபிம்ப வடிவ சைதன்னியம் சங்கமாயும் விகாரமாயும் இருத்தலினுலும் பிரதிபிம்பம் பிம்பத்தின் இலக்கண மின்றியதென்றும், பிம்பவடிவ சைதன்னியத்தைப் போல பிரதி பிம்பவடிவ சைதன்னியம் ஸ்புரணத்தன்மை (விளக்கத்தன்மை) யுடைமையின், அது (பிரதிபிம்பம்) பிம்பத்தைப்போல உள்ளதென்றும், பிம்பாபாச விலக்கணத்தை உய்த்துணர்க. எனவே, ஆபாச மென்னும் சொற்கும் பிரதிபிம்ப மென்னும் சொற்கும் சிறிது விளங்குதல் என்னும் பொருள் ஒத்திருத்தலாலும், ஆபாசத்திற்குக்கூறும் இலக்கணம் பிரதிபிம்பத்திற்கு அமைதலானும் ஆபாச மென்னுது பிரதிபிம்பம் என்றனர் என்பது பெறப்பட்டதென்க.

அந்தப் ‡ பிரதிபிம்ப சைதன்னியம் $ சர்வஞ்ஞனாகிய ஈசுவர (ஐசுவரியசம்பன்ன)னென்று சொல்லப்படும்.

அச்சத்துவகுண மாயை சத்துவத்திற் சத்துவம், சத்துவத்தில் ராஜதம், சத்துவத்தில் தாமத மென்னும் முக்குண சொரூபமாயிருக்கும்.

---

‡ இங்குப் பிரதிபிம்ப சைதன்னியத்தை ஈசுவரனென்று கூறினாராயினும், அதிஷ்டான ஆசிரயசகித பிரதிபிம்ப சைதன்னியம் ஈசுவரனென்று பொருள்கொள்க. அவ்வாறு கொள்ளாக்கால் விட்டு விடாத இலக்கணைக்கு விரோதமாமென்றறிக. அவித்தையிற்றோன்றும் பிரதிபிம்பம் சீவனென்று கூறுமிடத்தும் இவ்வாறே பொருள் கொள்க. ஈண்டு அதிஷ்டானம் ஆசிரயம் ஆபாசம் மூன்றும் ஈசுவரனுக்கும் சீவனுக்கும் சொரூபமென்று அறிக. "சுத்த சத்துவப் பிரதானமான மாயையில் பிரதிபிம்பித்தவரே அஜர் அதாவது ஈசுவரன். சத்துவப்பிரதானப் பிரகிருதி மாயையென்று சொல்லப்படுகின்றது. அந்தமாயை சர்வஞ்ஞனாகிய ஈசுவரனுக்குத் தன்வசப்பட்ட உபாதியாம். ஆதலால், அவ்வீசுவரனுக்கு வசப்பட்டமாயையினை யுடைமையும், ஏகத்தன்மையும், சர்வஞ்ஞத் தன்மையும் உண்டு" என்னும் சரஸ்வதீரஹஸ்யோபநிஷத்தின் 14-15 வாக்கியத்தால் சுத்தசத்துவப்பிரதானம் மாயை யென்பதும், அதிற்பிரதிபிம்பித்தவன் ஈசுவரன் என்பதும், அவன் சர்வஞ்ஞன் ஏகனென்பதும் காண்க.

$ சர்வஞ்ஞன் – சர்வஞ்ஞத்துவமுடையவன். ஈண்டுச் சர்வஞ்ஞத்துவமென்பது (முற்றறிவுடைமை) சர்வசக்தித்துவம், (முழுவல்லமையுடைமை) சுவதந்திரத்துவம் (பராதீனமாகாமை) என்பனவற்றிற்கு உபலக்ஷணமென்க. இங்குமாயாப்பிரதிபிம்பர் அந்த மாயையை வசஞ்செய்து சர்வஞ்ஞனாகிய ஈசுவரன் ஆகின்றார். உபலக்ஷணம்– விடாத இலக்கணையால் அதிக அர்த்தத்தை யுணர்த்துவது.



அவற்றுள் * சத்துவத்திற் சத்துவம் பிரதானமாகும் போது † அதிற்பிரதி பிம்பமாயுள்ள ஈசுவரன் சகத்தை ரக்ஷிக்கின்றமையால் விஷ்ணுவென்றும், ‡ சத்துவத்தில் ராஜதம் பிரதானமாகும்போது ‖ அதிற் பிரதி பிம்பமாயுள்ள ஈசுவரன் சகத்தைச் சிருஷ்டிக்கின்றமையால் பிரஹ்மாவென்றும், ‡‡ சத்துவத்தில் தாமதம் பிரதானமாகும்போது $ அதிற் பிரதி பிம்பமாயுள்ள ஈசுவரன் சகத்தை § உபசங்காரஞ் செய்கின்றமையால் †† உருத்திரனென்றும் சொல்லப்படுவேன்.

இங்ஙனம் × சத்துவகுண கற்பனை கூறப்பட்டது.

---

* நின்மலமான (அழுக்கின்றிய) ஜலத்தில், நின்மலமான ஜலம் மேம்படுவதுபோல சத்துவகுணமாயையில் சத்துவகுணம் மேம்படும்போது.

† 'அதில்' - அச்சத்துவத்தில்.

‡ நின்மலமான ஜலத்தில் கலங்கல் நீர் மேம்படுவது போல சத்துவகுணமாயையில் ராஜதகுணம் மேமபடும்போது.

‖ 'அதில்' அவ்விராஜதத்தில்.

‡‡ நின்மலமான ஜலத்தில் வண்டல் நீர் மேம்படுவதுபோல சத்துவகுணமாயையில் தாமதகுணம் மேம்படும்போது.

$ 'அதில்' அத்தாமதத்தில்

§ 'உப' என்னும் உபசர்க்கம் ஈங்குப் பொருளின்றியது

†† மாயையே இறைவனது இச்சைவயமாய்ப் பிரம விஷ்ணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளின் உருவத்தையடைகின்றது. இங்கு "இறைவனொருவனே தண்ட கமண்டலங்களைத் தரிக்கும் நான்முக மூர்த்தியால் (திருமேனியால்) உபகிதமாய் உலகத்தைச் சிருட்டிக்கும் பிரமாவெனவும், சங்கு சக்கரம் கதை பத்மங்களைத் தரிக்கும் நாற்புயமூர்த்தியால் உபகிதமாய் உலகத்தைக் காக்கும் விஷ்ணுவெனவும், முக்கண்ணும் முத்தலைச்சூலமு முடைய மூர்த்தியால் உபகிதமாய் உலகத்தை யழிக்கும் உருத்திரனெனவும் ஆகின்றான்" என்னும் தத்வானு சந்தானத்தின் அருங்கருத்து உணரத்தக்கது. இரக்ஷிக்கை, சிருட்டி, உபசங்காரம் இம்மூன்றும் இறைவனுக்குத் தடத்த விலக்கணமெனவும், சத்துச்சித்து ஆனந்த முதலியன சொரூப விலக்கணமெனவும் கொள்க.

× சத்துவகுணத்தினது கற்பனை என ஆறனுருபுவிரிக்க. ஈண்டுக் கற்பனைஎன்பது செயல் என்னும் பொருளது.

இராசத குணம் * அனேகருபமாய்ப் பிரிந்து † அவித்தைகளென்றும் சீவ ‡ காரண § சரீரங்களென்றும் சொல்லப்படுவனவாய் ஒன்றற்கொன்று $ தாரதம்மிய முள்ளவைகளாயிருக்கும்.

---

* இருள்போல அம்சத்தால் பலவடிவமாய். எனவே, இருள் ஒன்றாயிருப்பினும் அம்சத்தால் பலவாயிருத்தல்போன்று ரஜோகுணமென்னும் அவித்தையும் ஒன்றாயிருப்பினும் அம்சத்தால் பலவடிவமாயிருத்தல் என்பது பெறப்பட்டதாம். அம்சத்தால் அவித்தை யென்னும் உபாதி பலவாயிருத்தலின், அவற்றிலுள்ள பிரதிபிம்ப சீவர்களும் பலவாம்.

† 'அவித்தைகளென்றும்' என்பதில் அவித்தை என்பதற்கு வித்யையினால் நாசமுறுவது என்பது பொருளாம். ஈண்டு அகரம் விரோதப்பொருளில் வந்தது. இலக்கணம்:— எது (எந்த மூலப்பிரகிருதியின் ரஜோகுணம்) தன்னுடைய ஆசிரயத்துக்கு (தன்னுடைய பற்றுக்கோட்டிற்கு—சீவனுக்கு) வியாமோகத்தை விளைவிக்கின்றதோ அது(அந்தமூலப்பிரகிருதியின் ரஜோகுணம்) அவித்தை.

‡ இவ்வவித்தை தூல சூக்கும சரீரமுதலியவற்றிற்குக் காரணமாகின்றது. இதற்குக் (இவ்வவித்தைக்கு) காரணத்தன்மை பிரகிருதியின் அவஸ்தா விசேஷமாயிருத்தலால் உபசாரமாகச் சொல்லப்பட்டுள்ளது.

§ சரீரம் = தத்துவ ஞானத்தால் நாசமுறுவது.

$ தாரதம்மியம் = ஆவரணத்தன்மையின் (மறைப்பின்) தாரதம்மியம்.



இவ்வவித்தைகளிடத்திலும் ‖ மலினசலப் பிரதிவிம்பம் போலப் பிரமப் பிரதி விம்பமுளவாம். இப்பிரதிவிம்ப சைதன்னியங்கள் †† கிஞ்சிஞ்ஞரென்றும் × சிதாபாச சீவரென்றும் V பிராஞ்ஞரென்றுஞ் சொல்லப்படும்.

---

‖ அழுக்குள்ளஜலத்தில் சூரியப்பிரதிபிம்பம் உளதாதல்போல. இவ்வுவமையிலுள்ள மலினஜலம் என்னும் விசேஷணத்தால் அவித்தை அசுத்த சத்துவ குணமெனப் பெறப்பட்டது. சத்துவ குணத்தின் அசுத்தமாவது மற்ற ரஜோதமோ குணங்களால் மலினமாதல்.

†† அவித்தையிற் பிரதிபிம்பமாயுள்ள ஞானாத்மாவாகிய பிரமம் அந்த அவித்தையின் வசமாகி அற்பஞ்ஞத்தன்மை (சிற்றறிவு) முதலிய குணங்களை யுடையதாயிருத்தலால் கிஞ்சிஞ்ஞர் (அற்பவறிவுடையவர்) எனப்படுகின்றது.

× சிதாபாசராகிய சீவர்என்றாவது, சிதாபாசரென்றும், சீவரென்றும் என்றாவது பொருள்கொள்க. சிதாபாசர்-சித்தின்இலக்கண மில்லாதவராய்ச் சித்தைப்போல் தோற்றுபவர். இவர் அற்பஞ்ஞரும் அற்பசத்திமானும் பராதீனருமாவர்.

V பிரகிருஷ்டமான (மிக்க) சுயம்பிரகாசவடிவ ஆனந்தாத்மாவில் அஞ்ஞான விருத்தியாகிய ஞானம் எந்தச்சுழுத்தி யபிமானருக்கு இருக்கின்றதோ அவர் பிராஞ்ஞர் எனப்படுவர். அல்லது அந்த அவித்தையாகிய காரணசரீரத்தில் தாதான்மிய அதாவது அபேத அத்தியாசத்தால் 'நான் அஞ்ஞானி' என்று அபிமானிப்பவனாகிய ஜீவன் பிராஞ்ஞனாகின்றான். பிரஞ்ஞையாகிய ஞானதிருஷ்டியான அவிநாசிசொரூபம் எவனுக்கு இருக்கின்றதோ அவன் பிரஞ்ஞன்; பிரஞ்ஞனே பிராஞ்ஞன் என்னும் பெயருடையவனாகின்றான் என்று பஞ்சதசி கூறுவதுபோலக் கூறினும் அமையும்.

இவ்வவித்தைகளும் இராசதத்திற் சாத்துவீகம் இராசதத்திலிராசதம் இராசதத்திற் ருமதம் என்னு முக்குண சொரூபங்களாகவுள்ளன. இவற்றுள் * இராசதத்திற் சாத்துவீகம் பிரதானமாகும்போது † அதிற் பிரதிபிம்பமாயுள்ள சிதாபாசன் ‡ தத்துவ ஞானநிஷ்டனுவன். $ இராசதத்தில் இராசதம் பிரதானமாகும்போது, + அதிற்பிரதி பிம்பமாயுள்ள சிதாபாசன் § காமக்குரோதபரனுய்க் கன்ம நிஷ்டனுவன்.

---

* கலங்கல் ஜலத்தில் தெளிந்தஜலம் மேம்படுவதுபோல ரஜோகுணஅவித்தையில் சாத்துவீகம் மேம்படும்போது.

† 'அதில்' அச்சத்துவத்தில்.

‡ 'தத்துவ ஞான நிஷ்டன்'— இங்குத் தத்துவமென்பது உண்மையென்னும்பொருளது. சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது மயக்கஉணர்வின்றி உண்மையுணர்வுண்டாம். அதில் நிலைபெறுவன் இச்சீவன் என்க. இதை

"பற்று மாசின்மை யாற்பளிங் கொப்பது
உற்ற நல்லறி வானதுண் டாக்குவ
தெற்று மின்பமல் லாற்றுன்ப மென்பது
சற்று மில்லது சத்துவ மாவதே."

என்னும் பகவத்கீதை செய்யுட்கொண்டு அறிக

$ கலங்கல் ஜலத்தில் கலங்கல் ஜலம் மேம்படுவதுபோல ரஜோகுண அவித்தையில் இராசதம் மேம்படும்போது.

+ 'அதில்'— அவ்விராசதத்தில்.

§ காமக்குரோத முதலிய குணங்களில் சிரேஷ்டனுய் இம்மை மறுமைக்கு எதுவான உழவாதி வேள்வியாதி கருமங்களில் நிலைபெற்றவனுவன்.

காமம்—இவ்விடயம் எனக்கு எப்போது கிடைக்குமென்னும் அவாவிசேடம்.

குரோதம்—கண்சிவத்தல் முதலிய வற்றிற்குக் காரணமான துவேஷ விசேடம். காமமே குரோத ரூபமாய்ப் பரிணமித்தலின், காமத்தை முன்னர்க் கூறினர்போலும்.

இதனை, "ஓது ராக வுருவ முடையது
தாது கற்புரை யுண்ணிறஞ் சார்ந்தது
பேதுசெய் வினையோ டறிவைப் பின்னற்
கேது வாய திராசத மென்பவே."

என்னும் பகவத்கீதைச் செய்யுளாலுணர்க.



†† இராசதத்திற் ருமதம் பிரதானமாகும்போது ‡‡ அதிற் பிரதிபிம்பமாயுள்ள சிதாபாசன் ** சோம்பல் நித்திரை மயக்கங்கள் உடையவனுவன். இங்ஙனம் இராசத குணகற்பனை சொல்லப்பட்டது.

---

†† கலங்கல் ஜலத்தில் வண்டல் ஜலம் மேம்படுவதுபோல ரஜோகுண அவித்தையில் தாமதம் மேம்படும்போது.

‡‡ 'அதில்'— அத்தாமதத்தில்.

** 'சோம்பல்' - நன்னெறிக்கண் முயலும் வலியின்மை. 'நித்திரை'- இலயரூபமான விருத்தி விசேடம். 'மயக்கம்'—திரிபுணர்ச்சி (விபரீத ஞானம்). அல்லது பகுத்தறிவு இன்மை. இதனை,

"குறியு நீல மயக்கமுங் கோதிலா
நெறிக டம்மை யிகழ்தலு நித்திரை
செறிதலா னதுமற் றிவற்றுற் றிண்ணென்
றறிவை மாய்க்கு மதுதம மாவதே."

என்னும் பகவத்கீதைச் செய்யுளாலுணர்க. இராசதத்தில் சத்துவமாவது, இராசதமாவது, தாமதமாவது மேம்படும்போது மற்றைய இரண்டு குணங்களும் அடங்கிநிற்கும்.

இதனை,

"வாழும் சத்துவ மற்றைய விரண்டையு மறைத்துத்
தாழு மற்றைய விரண்டுமெத் தமோகுணந் தழைப்பின்
வீழுஞ் சத்துவந் தமங்களவ் விரசதம் விளைவி
னூழின் மற்றிவை யிரண்டுந்தாழ்ந் தொன்றுமிக் குளதாம்."

என்னும் பகவத்கீதைச் செய்யுளாலுணர்க.

* தாமத குணமானது ஆவரணம் விக்ஷேபமென இரண்டு சத்திகளாகத் தோன்றும். இவ்விரண்டில் § ஆவரண சத்தியானது

---

* இப்பிரிவு, "தாமத குணமிரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும், வீமமா மூடலென்றும் விவிதமாந் தோற்றமென்றும்" என்னும் கைவல்லிய நவநீதம் போன்றிருப்பது உணர்க.

ஆவரணம் (மூடல்—மறைப்பு) அஸ்தி (இருக்கிறது), பாதி (விளங்குகிறது) என்னும் விவகாரத்திற்கு யோக்கியமான வஸ்துக்களில் நாஸ்தி (இல்லை), நபாதி (தோற்றவில்லை) என்னும் விபரீத விவகாரத்தைச் சம்பாதிப்பது. இது அசத்துவாபாதகம், அபானுபாதகம் என இருவகைப்படும். நாஸ்தி என்னும் விவகாரத்திற்கு ஏது அசத்துவா பாதக (அசத்துத் தன்மையைச் சம்பாதிக்கும்) ஆவரணம். இது பரோக்ஷ ஞானத்தால் அழிவுறும். நபாதி என்னும் விவகாரத்திற்கு ஏது அபானு பாதக (தோற்றமின்மையைச் சம்பாதிக்கும்) ஆவரணம். இது அபரோக்ஷ ஞானத்தால் அழிவுறும்.

விக்ஷேபம் (தோற்றம்). பிரபஞ்சமும் அதன் ஞானமும் விக்ஷேபமாம். அதனை உண்டாக்கும் சத்தி எதுவோ அது விக்ஷேபசத்தியாம்.

§ ஆவரணசத்தி – ஆவரணத்தைச் செய்யும் சத்தி என்றுவது ஆவரணத்திற்கு ஏதுவான சத்தி என்றுவது விரித்துப் பொருள் கொள்க.



† தத்துவஞானியும் ஈசுவரனுந்தவிர மற்றைச் சீவர்கட்கெல்லாம் சரீரத்திரயம் (மூன்றுசரீரம்) சிதாபாசன் சாக்ஷிசைதன்னியங்களின் ஒன்றற்கொன்றுள்ள ‡ பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைக்கப்பட்ட சீவர்கள் †† இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக (ஒருதன்மையனவாக) நானென்றபிமானிப்பர். இந்த அபிமானமே அகங்காரக்

---

† தத்துவஞானி – தத்துவ ஞானத்தையுடையவன். இத்தத்துவஞானம் சற்குருவின் உபதேசத்தால் சிதாபாசனுக்குத் தோன்றிய பிற்கணத்திலேயே ஆவரணசத்தி விசிட்டஅஞ்ஞானம் அழிந்துபோதலின், சிதாபாசனாகிய தத்துவ ஞானிக்கு ஆவரணமில்லாமை பெறப்பட்டது.

இத்தத்துவஞானம் சற்குருவின் உபதேசத்தாற் றோன்றுது இயல்பாகவே உண்மையின் ஈசுவரனுக்கு எஞ்ஞான்றும் ஆவரண சத்தி விசிட்டஅஞ்ஞானம் இல்லையாம். அதனால் பிரமப் பிரதிபிம்பமாயுள்ள ஈசுவரனுக்கு ஆவரணமில்லாமை பெறப்பட்டது. ஈசுவரனுக்கும் ஆவரணம் உண்டெனின், அதனைப்போக்கச் சற்குருவாகிய வேறொரு ஈசுவரன் வேண்டும். வேண்டவே, அநவத்தை முதலிய அளவிறந்த குற்றம் அணுகுமென்க. இதுபற்றியே 'தத்துவஞானியும் ஈசுவரனும் தவிர' என்றார்.
இவ்வாறு,

"தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி நாஸ்திந பாதி யென்னும்
ஊனிடை யுயிர்க ளுள்ளத் துணர்விழி குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடு மழைநிசி யிருளபோன் மூடும்."

என்னும் கைவல்லிய நவநீதம் கூறுவது உணரத்தக்கது.

‡ ஆவரணசத்தி இவ்வாறு பேதந்தெரியவொட்டாமல் மறைப்பதை,

"மூன்றமாம் பிரமத் துக்கும் புறத்துள விகாரங் கட்கும்
ஆன்றகூடஸ்த னுக்கு மகத்துள விகாரங் கட்கும்
தோன்றிய பேதஞ் சற்றுந் தோன்றுமன் மறைத்து மூடும்
ஊன்றிய பவவி யாதி யுண்டாக்கு மூபாதி யீதே."

என்னும் கைவல்லிய நவநீதமும் கூறுதல் காண்க.

†† இருபத்தொன்பது தத்துவங்களாவன:—

தூல சரீரதத்துவம் 6; சூக்குமசரீர தத்துவம் 20; காரண சரீரதத்துவம் 1; சிதாபாசன் 1; சாக்ஷி சைதன்னியம் 1 என்பனவாம். இங்குத் தத்துவம் என்பது கருவி என்னும் பொருளது.

§ கிரந்தியென்றும் ** சம்சாரபந்தம் (கட்டு) என்றுஞ் சொல்லப்படும். ‡‡ சற்குரு கடாக்ஷத்தாலிவ் வாவரணம் நீங்கி இருபத்தோன்பது தத்துவங்களில் ஒன்றற்கோன்றுள்ள $ பேதந் தெரிகிறதே முத்தி. இப்படிஆவரண சத்தியின் காரியஞ் சொல்லப்பட்டது.

---

§ கிரந்தி (முடிச்சு) மூன்று வகைப்படும். முதலது அகங்காரக் கிரந்தி. இறுதியது கர்மக்கிரந்தி. நடுவது சம்சயக்கிரந்தி. அகங்காரக் கிரந்தி புத்தி ஆத்மாக்களது ஒருமையுணர்ச்சி. கர்மக்கிரந்தி சஞ்சிதம் ஆகாமியம், பிராரத்தம் என மூன்று வகைப்படும். சம்சயக்கிரந்தி ஆத்மாவைப்பற்றிய அநாத்மாவைப் பற்றிய சம்சயங்கள்.

** சம்சாரம்—பிறப்பு மிறப்பும் சம்சாரமெனப்படும். அதில் கட்டுண்டற்கு இக்கிரந்தியாகிய அபிமானமே காரணமாதலின் இது சம்சாரபந்த மெனப்பட்டது.

‡‡ ஈண்டுச் சற்குரு என்றது ஐயந்தவிர்த்து நிலைத்த ஆசகலும் முத்தி அருள்பவனாகிய விதிதகுருவை. குரு— கு + ரு; கு=அஞ்ஞானம். ரு=ஞானம். எனவே ஞானத்தால் அஞ்ஞானத்தைப் போக்குபவர் என்பதாம். அல்லது பிரமஞானமகிமையால் கௌரவமுடையவர் எவரோ அவர் குரு. இங்கு, "எவ்வான்மாவின் ஞானத்தால் புருஷனிடத்தே குருத்தன்மையாமோ, அவ்வான்மா அத்தியந்தம் குருவாம்; அவ்வான்மாவை உபதேசம் செய்பவர் எப்புருஷரோ அவருக்கும் குருத்தன்மை யோக்கியமாம். அகங்காராதிகள் எப்புருஷனை ஆசிரயத்திருக்குமோ அவனையும் லகுத்தன்மையுடையவனுக்கும்; ஆகையால், அவ்வகங்காராதிகள் அத்தியந்தம் லகுவாம். அவ்வகங்காராதிகளை எப்புருஷன் நிவர்த்தி செய்வனோ அப்புருஷனும் குருவாதற்கு யோக்கியமாம்." என்னும் ஆத்ம புராணவாக்கியம் உணரத்தக்கது. இலக்கணம் - பிரமநிஷ்டராயும் சுரோத்திரியராயும் சரணடைந்த சீடனுக்கு வழிகாட்டும் புருஷனைப்போல அத்வைத பிரமத்தை உபதேசிப்பவர். பிரமநிஷ்டர் - பிரமத்தினிடத்து நிஷ்டையுடையவர். சுரோத்திரியர்—சுருதிகளின் பொருளை யுணர்ந்தவர்.

$ பேதம் தெரிவதாலாய முத்தியைப் பேதந்தெரிகின்றதே முத்தி என்றது உபசாரம்.



இனி * விக்ஷேப சத்தியினின்றும் சத்ததன் † மாத்திரையான (சத்தமாகிய அதுமாத்திரையான) ஆகாயமும், ‡ அதினின்றும் பரிசதன்மாத்திரையான (பரிசமாகிய அதுமாத்திரையான) வாயுவும், †† அதினின்றும் ரூபதன் மாத்திரையான (ரூபமாகிய அதுமாத்திரையான) அக்கினியும், ‖ அதினின்றும் ரசதன்மாத்திரையான (ரசமாகிய அதுமாத்திரையான) அப்புவும், ‡‡ அதினின்றும் கந்ததன்மாத்திரையான (கந்தமாகிய அதுமாத்திரையான) பிருதிவியுந் தோன்றின. இவ்வைந்து பூதங்கட்கும் காரணமான விக்ஷேபத்தில் தமசிற் சத்துவம் தமசிலிராசசம் தமசிற்றமசு என்னு மிவைகள் அற்பங்கருவாக (அற்பங்காரணமாக) இருந்தமையால் அதன் காரியமாகிய ஐந்து பூதங்களும் ** முக்குணங்களுடனே தோன்றின. இப்பூதங்கட்குத் தன் மாத்திரைகளேன்றும், †† அபஞ்சீகிருத பூதங்களேன்றும், முக்குண பூதங்களேன்றும், சூக்கும பூதங்களேன்றும் பெயர் சொல்லப்படும்.

---

* விக்ஷேப சத்தி—விக்ஷேபத்தைச்செய்யும் சத்தி என்றாவது விக்ஷேபத்திற்கு ஏதுவான சத்தி என்றாவது விரித்து விக்ஷேபசத்தி உபகிதமான ஈசுவரனிடத்தினின்றும் என்று பொருளுரைக்க. இவ்வாறு பொருள் கொள்ளாக்கால் சேதனமான ஈசுவரனுக்குச் சர்வ காரணத் தன்மை (சர்வ உபாதான காரணத்தன்மை) கூறும் சுருதிக்கு முரணாமென்க.

† இங்கு மாத்திரை என்னும் பதம் மாத்திரம் (தனிமை) யென்னும் பொருளது. இது ஆகாயத்தின் கண் பரிச முதலானவற்றை விலக்க வந்த அடை. இவ்வாறு பிறவற்றின் கண்ணும் உய்த்துணர்க.

‡ 'அதினின்றும்'—அவ்வாகாச உபகித ஈசுவரனிடத்தினின்றும்.
†† 'அதினின்றும்'—அவ்வாயு உபகித ஈசுவரனிடத்தினின்றும்.
‖ 'அதினின்றும்'—அவ்வக்கினி உபகித ஈசுவரனிடத்தினின்றும்.
‡‡ 'அதினின்றும்'—அவ்வப்பு உபகித ஈசுவரனிடத்தினின்றும்.

** இங்கு, 'ஆதிமுக்குணம் இப்பூதமடங்கலும் தொடர்ந்து நிற்கும்' என்னும் கைவல்லிய நவநீதம உணரத்தக்கது.

†† பஞ்சீகிருதம் அல்லாத பூதங்கள் அபஞ்சீகிருத பூதங்கள் எனப்படும். பஞ்சீகிருத பூதங்கள் என்பது பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்களை, எனவே, சூக்கும பூதங்கள் என்றாயின.

* சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்களுந் தூல பூதங்களுந் தோன்றின. எங்ஙனமெனின், ஆகாய முதலான ஐந்து பூதங்களின் சாத்வீகாம்சத்திற் (பாகத்திற்) பூதத்துக் கோவ்வோரு மாத்திரை (அம்சம்) யெடுத்து ஒன்ருகக்கூட்டி வைக்கப்பட்டது † அந்தகரணமென்று சொல்லப்படும். இவ் வந்தக்கரணத்தில் ஆகாயத்தினம்சங்கூடியதற்கு ‡ அடையாளம் அந்தக்கரணமும் †† ஆகாயத்தைப்போல ‖ சகலமான கேள்விகட்கும் இடங்கொடுத்துத் தரிக்கின்றது. இப் படித் தரிக்கின்ற $ விருத்திக்கு § உள்ளமென்று பெயர். வாயுவினம்சங் கூடியதற்கடையாளம் அந்தக்கரணமும் வாயுவைப்போல அலேகின்றது. இப்படி அலேகின்ற விருத்திக்கு

---

* சூட்சுமபூத உபகித ஈசுவரனிடத்தினின்றும்.

† அந்தக்கரணம்—உட்கருவி. அந்தம் = உள்; கரணம் = கருவி. இதனே நையாயிகர் அணுவென்றும், மீமாஞ்சகர் முதலியோர் விபுவென்றும் கூறுப. இவற்றின் கண்டனம் முறையே தத்துவாது சந்தான முதலிய நூல்களிலும், நியாயப்பிரகாச முதலிய நூல்களிலும் காண்க. அத்வைத சித்தாந்திகள் அந்தக்கரணத்தை மத்திம பரிமாணம் என்பர். அணுப்பரிமாணமும், விபுப்பரிமாணமும் அல்லாதது மத்தியமபரிமாண மெனப்படும்.

‡ அப்பிரத்தியக்ஷ பதார்த்தத்தைக்காண்பிப்பது அடையாளம் (அறிகுறி) எனப்படும். மலேயின்கண் அப்பிரத்யக்ஷமாகிய தீயை அறிவிப்பது புகையாதல்போல அந்தக்கரணத்தில் அப்பிரத்யக்ஷமாகிய ஆகாசத்தினம்சத்தை யறிவிப்பது சகலமான கேள்விகட்கும் இடங்கொடுத்துத் தரித்தலாம். இவ்வாறு பிறவும் கொள்க.

†† ஆகாயம் மற்றைய பூதங்கட்கு இடங்கொடுத்தல்போல.

‖ கேட்கத்தக்க கல்விகள் அனேத்தும் தங்கிநிற்றற்கு.

$ விருத்திக்கு—அந்தக்கரணத்தின் பரிணமமாயவிருத்திக்கு.

§ உள்ளம்— சகலமான கேள்விகளேயும் தரித்து நிற்கும் விருத்தியுடைய அந்தக்கரணம்.



†† மனமென்றுபெயர். அக்கினியினம்சங் கூடியதற்கடையாளம் அந்தக்கரணமும் அக்கினியைப் போல ஈதின்னதென்று விளக்குவிக்கின்றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் ** புத்தி யென்று பெயர். அப்புவினம்சங் கூடியதற்கடையாளம் அந்தக்கரணமும் அப்புவைப்போல விடயங்களேப் பற்றியிழுக்கின்றது. இப்படி யிழுக்கின்ற விருத்திக்குச் ††† சித்தமென்று பெயர். பிருதிவியினம்சங் கூடியதற்கடையாளம் அந்தக்கரணமும் பிருதிவியைப்போலக் கடினமாக நின்று நானெனன்றபிமானிக்கின்றது. இப்படி யபிமானிக்கின்ற விருத்திக்கு ‡‡ அகங்காரமென்று பெயர்.

---

†† மனம்— சங்கற்ப விருத்தியுடைய அந்தக்கரணம்.

** புத்தி— நிச்சய விருத்தியுடைய அந்தக்கரணம்.

††† சித்தம்— ஸ்மரண விருத்தியுடைய அந்தக்கரணம்.

‡‡ அகங்காரம்— அபிமான விருத்தியுடைய அந்தக்கரணம்.

| எண். | அந்தக்கரணம் | கோளகம் (இடம்) | தேவதை | தொழில் |
|---|---|---|---|---|
| 1 | உள்ளம் | சிரம் | சதாசிவன் | தரித்தல் |
| 2 | மனம் | கண்டம் | சந்திரன் | சங்கற்பவிகற்பம் |
| 3 | புத்தி | இருதயம் | பிரமன் | நிசசயம் |
| 4 | சித்தம் | நாபி | விட்டுணு | ஸ்மரணே |
| 5 | அகங்காரம் | சர்வாங்கம் | உருத்திரன் | அபிமானம் |

பின்னும் ஆகாய முதலிய பஞ்ச பூதங்களின் சாத்விகாம்சத்திலே பூதத்திற்கொவ்வொரு மாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைக்கப்பட்டது சுரோத்திராதி * ஞானேந்திரியங்களென்று சொல்லப்படும். இவைகளில் † சுரோத்திரம் ஆகாசத்தின் அம்சமான படியால் ஆகாசத்தின் குணமான சத்தத்தை மாத்திர மறியும். ‡ துவக்கு வாயுவினம்சமானபடியால் வாயுவின் குணமான பரிசத்தை மாத்திரம் அறியும். †† சட்சு அக்கினியினம்சமானபடியால் அக்கினியின் குணமான ரூபத்தை மாத்திர மறியும். § சிங்நுவை அப்புவினம்சமானபடியால் அப்புவின் குணமான இரசத்தை மாத்திரமறியும். †† ஆக்கிராணம் பிருதிவியினம்சமான படியால் பிருதிவியின் குணமான கந்தத்தைமாத்திர மறியும். இப்படி ஐந்தும் ஒன்றோடொன்று கூடாதபடியால்

---

* ஞானேந்திரியம்-(அறிகருவி) சத்த முதலியவற்றின் ஞானத்திற்குச் சாதனமான இந்திரியம்.

† சுரோத்திரம்-சத்தஞானத்திற்குச் சாதனமான இந்திரியம்.

‡ துவக்கு-பரிசஞானத்திற்குச் சாதனமான இந்திரியம்.

†† சட்சு-உருவ ஞானத்திற்குச் சாதனமான இந்திரியம்.

§ சிங்நுவை-இரச ஞானத்திற்குச் சாதனமான இந்திரியம்.

†† ஆக்கிராணம்- கந்த ஞானத்திற்குச் சாதனமான இந்திரியம்.



$ ஒன்று ** மற்றொன்றின் குணத்தை யறியமாட்டாது. அந்தக்கரணம் ஐந்து மாத்திரையும் ஒன்றாகக் கூடியதானமையால் ஐந்திந்திரியங்களினாலும், ஐந்து விடயங்களையு மறியும். அந்தக்கரணம் ஐந்து ஞானேந்திரியம் ஐந்து ஆகியபத்தும் சத்துவாம்சமானபடியால் ஞானசாதனமாயின.

---

$ 'ஒன்று '– ஓர் இந்திரியம்.

** 'மற்றொன்றின் குணத்தை '– மற்றொரு இந்திரியத்தின் விஷயமாய குணத்தை.

| எண் | ஞானேந்திரியம் | கோளகம் | தேவதை | தொழில் |
|---|---|---|---|---|
| 1 | சுரோத்திரம் | செவி | திக்கு | கேட்டல் |
| 2 | துவக்கு | தோல் | வாயு | ஸ்பரிசித்தல் |
| 3 | சட்சு | கண் | சூர்யன் | காண்டல் |
| 4 | சிங்நுவை | நாக்கு | வருணன் | உருசித்தல் |
| 5 | ஆக்கிராணம் | மூக்கு | அசுவினி | மோத்தல் |

பின்னும் ஆகாய முதலான ஐந்து பூதங்களின் இராசதாம்சங்களிற் பூதத்துக்கு ஓரொரு மாத்திரை எடுத்து ஒன்றாகக் கூட்டி வைக்கப்பட்டவை வியானாதி பஞ்சவாயுக்களாம். இவைகளில், * வியானவாயு ஆகாயத்தினம்சமானபடியால் ஆகாயத்தைப்போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். † பிராணவாயு வாயுவினம்சமானபடியால் வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசியாதிபரியந்தம் அலையும். ‡ அபானவாயு அக்கினியினம்சமான படியால் அக்கினியைப்போலச் சாடராக்கினி (உதராக்கினி)யாக உஷ்ணித்துக்கொண்டு குதத்தைப்பற்றி நின்று உண்ட அன்னபானாதிகளைச் சீரணிப்பிக்கும். †† சமானவாயு அப்புவினம்சமான படியால் சரீரநடுவான நாபிஸ்தானத்தினின்று உண்ட அன்னரசங்களை அப்புவைப்போல இழுக்கும்.

---

* வியானவாயு— சகல நாடிகளிலும் செல்லும் சுபாவ முடையதாய்ச் சரீரமுழுவதிலும் இருக்கும் வாயு வியானன்.

† பிரணவாயு— எப்போதும் மேற்செல்லும் சுபாவமுடையதாய் நாசிநுனியி லிருக்கும் வாயு பிராணன்.

‡ அபானவாயு— கீழ்செல்லும் சுபாவமுடையதாய்க் குத முதலியவற்றிலிருக்கும் வாயு அபானன்.

†† சமானவாயு— சரீரமத்தியி லிருந்துகொண்டு அன்னரச முதலியவற்றைச் சரீர முழுவதினும் நாடிவழியாய்ச்செலுத்தும் வாயு சமானன்.



$ உதானவாயு பிருதிவியினம்சமானபடியால் கண்டத்தைப்பற்றிப் பிருதிவியைப்போல கடினமாகநின்று உண்ட அன்னபானாதிகளைக்கடையும். இந்தஐந்துவாயுக்களையுமல்லாமல் வாந்திபண்ணுவிக்கின்றது நாகனென்றும், இமைத்து விழிப்பிக்கின்றது கூர்மனென்றும், குறு குறுத்துத் தும்முவிக்கின்றது கிரிகரன் என்றும், கொட்டாவிகொள்ளுவிக்கின்றது தேவதத்தனென்றும், வீங்குவிக்கின்றது தனஞ்சயனென்றும் வேறே ஐந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவர். இவ்வைந்தும் பிராணனுடைய தொழிலானபடியால் †† வேறல்ல.

---

$ உதானவாயு— மரணகாலத்தில் மேற்செல்லும் சுபாவமுடையதாய்க் கண்டத்திலிருக்கும் வாயு உதானன்.

†† பிராணன் முதலிய ஐந்து வாயுவினும், நாகன் முதலிய ஐந்துவாயுக்களை வேறாக ஒப்புவதில் கௌரவக்குற்றமும் (மிகைபடக்கூறலும்), சுருதி முதலிய பிரமாணங்கள் இல்லாமையும் ஆகிய இருவகை குற்றங்கள் உள. ஆகலின் அவ்வைந்து வாயுக்களும் பிராணன் முதலியவைகளில் அடங்கியவென்று தத்துவாநுசந்தான முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளனவாதலின் ‘வேறல்ல’ என மறுத்தார்.

| எண் | வாயுக்கள் | கோளகம் | தேவதை | தொழில் |
|---|---|---|---|---|
| 1 | வியானன் | சர்வாங்கம் | விசுவயோனி | தாங்குதல் |
| 2 | பிராணன் | இருதயம் | விசிட்டன் | உசுவாசம், நிசுவாசம் |
| 3 | அபானன் | குதம் | விசுவகர்த்தா | சீரணிப்பித்தல் |
| 4 | சமானன் | நாபி | சயன் | இழுத்துச் செல்லல் |
| 5 | உதானன் | கண்டம் | அயன் | கடைதல் |

பின்னும் ஆகாயம் முதலான ஐந்து பூதங்களின் இராசதாம்சத்திற் பூதத்துக்கு ஓரொரு மாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைக்கப்பட்டவை வாக்கு முதலிய * கன்மேந்திரியங்களென்று சொல்லப்படும். இவைகளில் † ஆகாயத்தினிடமாக ‡ வாக்கு வசனிக்கும். வாயுவினிடமாகப் $ பாணியிடுதல் ஏற்றல் செய்யும். அக்கினியினிடமாகப் ‖ பாதம் நடக்கும். அப்புவினிடமாகப் § பாயுரு மலசலங்களை வெளியிற்றள்ளும். பிருதிவியினிடமாக

* கன்மேந்திரியம் (தொழிற்கருவி) — வசனித்தல் முதலிய கர்மத்திற்குச் சாதனமான இந்திரியம்.

† ஆகாயத்தை இடமாகக்கொண்டு.

‡ வாக்கு (வாய்) — வசனித்தற்கிரியைக்குச் சாதனமான இந்திரியம்.

$ பாணி (கை) — ஏற்றல் இடுதல் கிரியைக்குச்சாதனமான இந்திரியம்.

‖ பாதம்(கால்)- போதல் வருதல் கிரியைகட்குச் சாதனமான இந்திரியம்.

§ பாயுரு— மலசலத்தை விடுதற் கிரியைக்குச் சாதனமான இந்திரியம்.



× உபத்தம் சுகத்தைப்பண்ணும். இவ்வைந்திந்திரியங்களும் தனித்தனியே யிருக்கின்றமையால் ஒன்று மற்றொன்றின் தொழிலைச்செய்ய மாட்டாது. வியானன் முதலிய வாயுக்கள் ஐந்து மாத்திரையும் ஒன்றுகக்கூடியதானமையால் கன்மேந்திரியம் ஐந்தின் வழியினாலும் ஐந்து தொழிலையும் செய்து முடிக்கும். இவ்வாயுக்கள் ஐந்து கன்மேந்திரியங்கள் ஐந்து ஆகிய பத்தும் இராசதாம்சமானமையால் கிரியாசாதனமாயின.

அந்தக்கரணம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, வாயுக்கள் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து ஆகிய இருபது தத்துவங்களும் †† சூட்சும சரீரங்களென்று சொல்லப்படும். இச்சூட்சும சரீரங்களை மாயாப்பிரதிபிம்பராகிய ஈசுவரன் அவித்தியாப் பிரதி பிம்பராகிய சீவர்கள் அனேகரானமையால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருசரீரமாகச் சிருட்டித்தளித்தான். இப்படிச் சூட்சும சரீர கற்பனை சொல்லப்பட்டது.

× உபத்தம்— சுகக்கிரியைக்குச் சாதனமான இந்திரியம்.

†† இஃது (மனமுதலிய இருபது தத்துவங்களின் சமுதாயம்) அபஞ்சீகிருத சூட்சும பூதகாரியமும், கண்முதலிய பொறிகட்குப் புலனாகாததும், சுழுத்தி முதலிய அவத்தைகளில் அழிந்துபோவதுமாம். ஆதலின், இதனைச் சூட்சும சரீரமென்றனர்.

| எண் | கன்மேந்திரியம் | கோளகம் | தேவதை | தொழில் |
|---|---|---|---|---|
| 1 | வாக்கு | வாய் | அக்கினி | வசனித்தல் |
| 2 | பாணி | கை | இந்திரன் | இடுதலேற்றல் |
| 3 | பாதம் | கால் | உபேந்திரன் | கமனாகமனம் |
| 4 | பாயுரு | குதம் | யமன் | விசர்ச்சனம் |
| 5 | உபத்தம் | குய்யம் | பிரஜாபதி | ஆனந்தித்தல் |

இனித் தூலபூதஉற்பத்தி சொல்லப்படுகிறது. மிஞ்சிய தாமதாம்சமாக இருக்கின்ற ஐந்து பூதங்களையும் ஒவ்வொன்றை இரண்டிரண்டாகப் பகுத்து முதற் பாதியைந்தையும் ஒவ்வொன்றை நான்கு நான்காகப் பகுத்து இரண்டாம் பாதியைந்தில் தன்னம்சத்துடன் கூட்டாமல் மற்றைய நான்கு பூதங்களுடனும் பூதத்துக்கு அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகச் சேர்க்கின்றது * பஞ்சீகரணமென்று சொல்லப்படும்.

இங்ஙனம் பஞ்சீகரிக்கப்பட்ட ‡ தூல பூதங்களில் ¶ ஆகாயத்திற் பரிச ரூப ரச கந்தமாகிய நான்கு குணங்களும் வியாப்பியமானமையால் (வெளிப்படாதடங்கியிருக்கின்றமையால்) அதிரிசியமாம் (பொறிகட்குப் புலனாகாவாம்); நிஜகுணமாகிய சப்தம் திரிசியமாம் (செவிக்குப் புலனாவதாம்); வாயுவில் ரூபரச கந்தமாகிய மூன்று குணங்களும் வியாப்பியமானமையால் அதிரிசியமாம்; காரண குணமாகிய சப்தமும் நிசகுணமாகிய

* பஞ்சீகரணம்-ஒவ்வொரு பூதத்தையும் ஐந்தைந்து வீதங்களாகச் செய்தல்.

‡ "ஐந்துபூதமும்பத் தாக்கி யவைபாதி நன்னான் காக்கி
நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூதம்...............................''
என்ற கைவல்லியம் உணரத்தக்கது

¶ இங்கு, ஆகாய முதலியவற்றிற்கு அவகாசமும், சலித்தலும், வெம்மையும் ஒளிர்வும், நெகிழ்வித்தலும் நேயப்படுத்தலும், கடினத்தன்மையும் முறையே சொரூப இலக்கணமெனவும், சத்தமும், சத்தமும்பரிசமும், சத்தமும் பரிசமும் ரூபமும், சத்தமும் பரிசமும் ரூபமும் ரசமும், சத்தமும் பரிசமும் ரூபமும் ரசமும் கந்தமும் முறையே தடத்த இலக்கணமெனவும் அறிக.



பரிசமும் திரிசியமாம்; அக்கினியில் ரச கந்தமாகிய இரண்டு குணங்களும் வியாப்பியமானமையால் அதிரிசியமாம்; காரணகுணங்களாகிய சப்த பரிசமும் நிசகுணமாகிய ரூபமும் திரிசியமாம்; அப்புவில் கந்தகுணம் வியாப்பியமானமையால் அதிரிசியமாம்; காரணகுணங்களாகிய சப்த பரிச ரூபமும் நிசகுணமாகிய ரசமுந் திரிசியமாம்; பிருதிவியில் காரணகுணங்களாகிய சப்த பரிச ரூப ரசமும் நிசகுணமாகிய கந்தமுந் திரிசியமாம்.

| எண் | பூதம் | குணம் | தருமம் | தொழில் | அதிதேவதை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆகாயம் | சத்தம் | நிராகாரம் (வடிவின்றியது) | இடங்கொடுத்தல் | சதாசிவன் |
| 2 | வாயு | சத்தம், பரிசம் | சலனம் | உலர்த்தல் | மகேசுவரன் |
| 3 | தேயு | சத்தம், பரிசம், ரூபம் | வெப்பம் | தகித்தல் | உருத்திரன் |
| 4 | அப்பு | சத்தம், பரிசம், ரூபம், ரசம் | நெகிழ்ச்சி | பிண்டீகரித்தல் (திரட்டல்) | விஷ்ணு |
| 5 | பிருதிவி | சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் | கடினம் | பொறுத்தல் | பிரமன் |

சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்கள் தோன்றினாற்போலப் பஞ்சீகரிக்கப்பட்ட தூலபூதங்களினின்றும் ஆறுதத்வமாய் நால்வகைப் பிறப்பாய் மூவகைச் சாதியாயிருக்கின்ற ¶ தூலசரீரங்கள் தோன்றின. இவற்றுள் * ஆறு தத்துவங்களாவன சருமம் (தோல்), உதிரம் (இரத்தம்), மாம்சம் (சதை); சனுயு (நரம்பு), அஸ்தி (எலும்பு), மச்சை (எலும்பிலுள்ள மூளை) யாகிய இவைகளாம் நால்வகைப் பிறப்புக்களாவன:=†சராயுஜம், †† அண்டஜம், ‡ சுவேதஜம், $ உத்பிச்சம் ஆகிய இவைகளாம். மூவகைச்சாதிகளாவன:=‡‡ இகலோக பரலோக புத்தியைத் தருகின்ற மானுட சரீரங்கள் உத்தம சாதியாம். பரலோக புத்தியை மறைத்து இகலோக புத்தியை மாத்திரந்தருகின்ற பசுபக்ஷி முதலிய சரீரங்கள் மத்திம சாதியாம். இருவகைப் புத்தியையு மறைத்திருக்கின்ற மரஞ கொடி செடியாதிகள் அதம சாதியாம்.

---

¶ இஃது (சரும முதலிய ஆறுதத்துவங்களின் சமுதாயம்) பஞ்சீகிருத பூதகாரியமும், கண் முதலிய பொறிகட்குப் புலனுவதும், கணந்தோறும் சிரணபாவத்தை (அழியுமியல்பினை) அடைவதுமாம். ஆதலின், இதனைத்தூல சரீரமென்றனர்.

* இவ் வாறுதத்துவங்களுள் சருமம் முதலிய மூன்றும் தாயின் சுரோணிதத்தாலுண்டாவன எனவும், சனுயு முதலிய மூன்றும் தந்தையின் சுக்கிலத்தால் உண்டாவன எனவும் உணர்க.

அன்றியும் சருமம் உதிரத்தையும், உதிரம் மாமிசத்தையும், மாமிசம் சனுயுவையும், சனுயு அஸ்தியையும், அஸ்தி மச்சையயையும் மச்சை வீரியத்தையும் மறைத்தலின், இவை சட்கோச தத்துவம் எனவும் கூறப்படும்.

† தாயின்வயிற்றிற்கருப்பத்தைமறைக்கும் தோல்விசேடம் சராயு எனப்படும். இச்சராயுவினின்றும் உண்டாவனசராயுஜம் எனப்படும்.

†† முட்டையிற்றோற்றுவன.

‡ உஷ்ணத்தாலுண்டாகும் வெயர்வையிற் றோன்றுவன.

$ பூமியைப்பிளந்துகொண்டு தத்தம் விதை முதலியவற்றிலிருந்து உண்டாவன.

‡‡ இகலோக போகத்தையும், அதன்சாதனத்தையும் அறியும் அறிவு இகலோகபுத்தி. பரலோக (சுவர்க்க முதலியலோக)போகத்தையும் அதன் சாதனத்தையும் அறியும்அறிவு பரலோகபுத்தி.



இப்படிப் பிருதிவி தத்துவமாயிருக்கின்ற பூலோகத்திற்றோற்றுகின்றதுபோல, அப்பு, அக்கினி. வாயு, ஆகாயமென்னப்பட்ட தத்துவங்களாய் நிரனிறையே யிருக்கின்ற பிதிர்லோக, தேவலோக, யக்ஷகந்தர்வலோக, சித்தர்லோகங்களினும் சந்திரன் நட்சத்திரமாகத் தோற்றுகின்ற பிதிர்க்கள், சூரியன் முதலான தேவதை, யக்ஷ, கந்தருவர், சித்தர்கள் சரீரங்கள் உத்தமசாதியாம். காமதேனு, ஐராவதம், அன்னம், கருடனுதிய சரீரங்கள் மத்திமசாதியாம். கற்பகவிருக்ஷம், பாரிஜாதமாகிய சரீரங்கள் அதமசாதியாம்

தூலசரீரமே * அன்னமய கோசம். சூட்சும சரீரம் மூன்று கோசமாயிருக்கும். எங்ஙனமெனின், பிராணவாயுவுங் கன்மேந்திரியமுங் கூடிப் † பிராணமயகோசம். மனதும் ஞானேந்திரியமுங் கூடி

---

* அன்னமயகோசம்:— தாய் தந்தையர்களால் உண்ணப்பட்ட அன்னத்தினுலுண்டாகிய சுக்கில சுரோணிதங்களால் தாயினது வயிற்றில் தோன்றிப்பிறந்தபின்பு பால் முதலிய அன்னத்தால் விருத்தியடைந்து இறந்தபின், அன்னமயமாகிய பிருதிவியில் ஒடுங்கும் தூலதேகம் அன்னமயமாம். ஒருபுருஷனை சட்டைமறைப்பதுபோல நான் வருணச்சிரமம் உடையவன், நான் மனிதன், நான் பிறந்தேன், நான் வளர்ந்தேன், நான்பருத்தேன், நான்இளைத்தேன், நான் ஆண், நான் பெண், நான் கரியன், நான் செய்யன், நான் குட்டையன், நான் நெட்டையன் என்னு மிவ்வத்தியாசங்களால் அன்னமயமாகிய தூலதேகம் அகம்சத்தார்த்தமாகிய ஆத்மாவை மறைத்தலால் கோசமாம். [கோசம் - உறை]

† பிராணமய கோசம்:— கன்மேந்திரியம் ஐந்துடன் கூடிய பஞ்சப் பிராணன். அதைப் பிராணமய மென்றது பிராணனைப் பிரதானமாகவுடைமையின் என்க. நான்பசிதாகமுடையவன், நான்பலவான் நான் பலஹீனன், நான் வசனதான முதலிய கிரியையுடையவன் என்பன முதலிய அத்தியாசங்களால் இந்தப்பிராணமயம் அகம்சத்தார்த்தமாகிய ஆத்மாவை மறைத்தலால் கோசமாம்.

‡ மனோமய கோசம். புத்தியும் ஞானேந்திரியமுங்கூடி †† விஞ்ஞானமயகோசம். காரணசரீரமே** ஆனந்தமய கோசம். இப்படிப் பஞ்சகோசங்கள் சொல்லப்பட்டன.

---

‡ மனோமயகோசம்:— ஞானேந்திரியம் ஐந்துடன் கூடிய மனது. அதை மனோமயமென்றது மனத்தைப் பிரதானமாக வுடைமையின் என்க. நான் சங்கற்ப விகற்ப முடையவன், நான் சம்சய முடையவன், நான் இராகத்துவேஷமுடையவன், நான் சுகி, நான் துக்கி, நான் கண்டேன், கேட்டேன், தொட்டேன், ருசித்தேன், மோந்தேன் என்பன முதலிய அத்தியாசங்களால் இந்த மனோமயம் அகம்சத்தார்த்த ஆத்மாவை மறைத்தலால் கோசமாம்.

†† விஞ்ஞானமயகோசம்;— ஞானேந்திரியம் ஐந்துடன் கூடிய புத்தி விஞ்ஞானமயம். அதை விஞ்ஞான மயமென்றது விஞ்ஞானத்தைப் பிரதானமாக வுடைமையின் என்க. நான்கர்த்தா, நான் புத்திமான், நான் நிச்சயவான், நான் சப்த முதலிய விஷயங்களை அறிகிறவன்என்பன முதலிய அத்தியாசங்களால், இந்த விஞ்ஞானமயம் அகம்பதப்பொருளாகிய ஆத்மாவை மறைத்தலால் கோசமாம்.

** ஆனந்தமயகோசம்;— சொரூபாஞ்ஞானம். இதை ஆனந்த மயமென்றது பிரியமோத பிரமோதமாகிய ஆனந்தரூப விருத்திகளை உடைமையால் என்க. நான் பிரியன், நான் சுகி, நான் அறியேன் என்பன முதலிய அத்தியாசங்களால் இந்த ஆனந்தமயம் அகம்பதப் பொருளாகிய ஆத்மாவை மறைத்தலால் கோசமாம்.



ஆறு தத்துவங்களாயுள்ள தூல சரீரத்தில் இருபது தத்துவங்களாயுள்ள சூட்சுமசரீர மிருக்கின்றது. அஃதெங்ஙனேனின் கன்மேந்திரியங்களுள் வாக்கும், ஞானேந்திரியங்களுள் சிங்குவையும் வாயிலிருக்கும். உதான வாயுவும் மனதுங் கண்டத்திலிருக்கும். பிராணவாயுவும் புத்தியும் இருதயத்திலிருக்கும். சமானவாயுவும் சித்தமும் நாபியிலிருக்கும். அபானவாயுவும் பாயுருவும் குதத்திலிருக்கும். வியானவாயுவும் துவக்கிந்திரியமும் அகங்காரமும் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். உச்சியிலே யுள்ளமும், கருவிழிநுனியில் சட்சுவிந்திரியமும், காதினுள்ளே சுரோத்திரேந்திரியமும், மூக்குநுனியிலேகிராணேந்திரியமும், கழுத்துக்குமேல்தனித்தனியே யிருக்கும். கழுத்திற்குக் கீழே கை கால் குய்யங்களில் பாணி, பாதம், உபத்தம் மூன்றுந் தனித்தனியே யிருக்கும். இப்படித் தூலசரீர தத்துவங்களாறு; அதிற் குடிபுகுந்த சூட்சுமசரீர தத்துவங்களிருபது; ஆகத்தத்துவங்கள் இருபத்தாறும் பஞ்சபூதங்களின் காரியங்களானபடியினாலே ஒருமைப்பாடாகக் காரிய சரீரமென்று சொல்லப்படும்.

அவித்தையிற் பிரதிவிம்பனாயுள்ள சிதாபாசன் || சாக்கிரத்தில் இந்த இருபத்தாறு தத்துவங்களுடன் கலந்து நிற்கும் போது * விசுவனென்றும்,

---

|| சாக்கிரம்— திக்கு முதலிய தேவதைகளாற் றூண்டப்பட்ட செவி முதலிய பொறிகளால் ஓசை முதலியவற்றின் அனுபவம் சீவான்மாக்கட்கு நிகழும் அவத்தை. இதற்குத் தானம் புருவநடு.

* விசுவன்— சாக்கிரத்தில் மூன்றுதேகத்திற்கும் அபிமானியாகியசீவன். இங்குச் சூட்சுமசரீரத்தின் அபிமானத்தைவிடாமல்அந்தத் தூல சரீரத்திலும் நானென்னும் அபிமானத்தைச் செய்தலால் சாக்கிராபிமானியாகிய சீவன் விசுவன் எனப்படுகின்றான் எனப் பஞ்சதசி கூறுவதும் உணரத்தக்கது.

† வியாவகாரிக சீவனென்றும் சொல்லப்படுவன். × சொப்பனத்தில் தூல சரீரத்தைவிட்டுச் சூட்சும சரீரத்துடன் கூடி நின்றபோது, ‡ தைஜசனென்றும், †† பிராதிபாசிக சீவனென்றும் ‡‡ சொப்பன கற்பிதனென்றுஞ் சொல்லப்படுவன். § சுழுத்தியில் காரிய சரீர தத்துவங்களிருபத்தாறையும் கைவிட்டுக் காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தியிருக்கும்போது,

---

† வியாவகாரிக சீவன்- வியாவகாரிகசத்தையுடைய மனைவி மக்கள் முதலியவர்களோடு இயைபுடைய சீவன். வியாவகாரிகசத்தை - பிரம ஞானத்திற்கு முன் பாதிக்கப்படாத (மித்தையென்று நிச்சயிக்கப்படாத) பொருள்.

× சொப்பனம்- கனவில் இன்பத்துன்ப நுகர்ச்சியைப்பயக்கும் இருவினைகளும், செவி முதலிய பொறிகளும் ஒடுங்கியிருக்க நனவின் அனுபவத்தாலாய வாசனையால் ஓசை முதலியவையும், அவற்றின் அனுபவமும் சீவ ஆன்மாக்கட்குண்டாமவத்தை. இதற்குத் தானங் கண்டம்.

‡ தைஜசன்- சொப்பனத்தில் தூலதேகத்தின் அபிமானத்தைவிட்டுச் சூக்குமம் காரணமென்னும் இரண்டுதேகங்களின் அபிமானியாகியசீவன். இங்கு மலின சத்துவகுணப் பிரதான அவித்தையாகிய உபாதியுடைய காரண சரீரத்தின் அபிமானியான பிராஞ்ஞன் என்னும் சீவன் தேஜசு என்னும் சொல்லின் பொருளாய அந்தக்கரணமும் அதன் சம்பந்தமுள்ள பிராணாதிகளுமாகிய லிங்க சரீரத்தில் (சூட்சுமசரீரத்தில்) தாதான்மியமாகிய (அபேத) அபிமானத்தைச் செய்தலால் தைஜசன் எனப்படுகின்றான் என்று பஞ்சதசி கூறுவதும் உணரத்தக்கது

†† பிராதிபாசிக சீவன்- சொப்பனாவத்தையில் பிராதிபாசிக சத்தையுடைய மனைவி, மக்கள் முதலியவர்களோடு இயைபுடைய சீவன். பிராதிபாசிக சத்தை-பிரமஞானத்திற்கு முன்னமே பாதிக்கப்படும் பொருள்.

‡‡ சொப்பன கற்பிதன்- எவனால் சொப்பனம் கற்பிக்கப்பட்டதோ அவன் சொப்பன கற்பிதன் எனப் பொருள் கொள்க.

§ சுழுத்தி- நனவிலும் கனவிலும் போகநுகர்ச்சியைத் தரும் வினைகட்குண்டாகும் ஓய்வால் தூலசூக்கும வுடல்களிலுண்டாம் பற்று நீங்குதல் வாயிலாய் விசேடித்துணரும் ஞானங்களனைத்தும் ஒடுங்கும் புத்தியின் காரண அஞ்ஞான மாத்திரையாய்ச் சீவ ஆன்மாக்கள் நிலைக்குமவத்தை. இதற்குத்தானம் இருதயம்.



V பிராஞ்ஞன் என்றும், $ பாரமார்த்திக சீவனென்றுஞ் சொல்லப்படுவன். இப்படிச் சீவனுக்கு மூன்று சரீரங்களும் மூன்றவத்தைகளும் சொல்லப்பட்டன.

பிரம சைதன்னியமும் சாக்கிரத்துக்குச் சாட்சியாயிருக்கும்போது § சீவாத்மா வெனவும், சொப்பனத்துக்குச் சாட்சியாயிருக்கும்போது ††† அந்தராத்மாவெனவும், சுழுத்திக்குச் சாட்சியாயிருக்கும்போது ** பரமாத்மாவெனவும், அவத்தாத்திரய சாட்சியாயிருக்கும்போது ‡‡ ஞானாத்மா வெனவும், ||| கூடத்தர் எனவுஞ் சொல்லப்படும்.

---

V பிராஞ்ஞன்- சுழுத்தியில் தூலசூக்கும தேகங்களின் அபிமானத்தை விட்டுக், காரணதேகம் ஒன்றையே அபிமானித்துள்ள சீவன். இங்கு அவித்தையாகிய காரண சரீரத்தில் தாதான்மிய (அபேத)அத்தியாசத்தால் நான் அஞ்ஞானி என்றபிமானிப்பவனாகிய சீவன் பிராஞ்ஞன் எனப்படுகின்றான் எனப் பஞ்சதசி கூறுவதும் உணரத்தக்கது.

$ பாரமார்த்திக சீவன்- பாரமார்த்திக சத்தையுடைய பரசிவத்தோடு இயைபு உடைய சீவன். பாரமார்த்திக சத்தை-முக்காலத்தும் பாதிக்கப்படாத பொருள்.

§ சீவாத்மா- சர்வவிகாரங்களையும் சாக்ஷிமாத்திரமாக அறிந்துகொண்டு தான் யாதொரு விகாரமும் அடையாது எக்காலத்தும் அழிவின்றிய சீவிதப் பொருளாயிருப்பது.

††† அந்தராத்மா- சாக்கிர சுழுத்திகட்கு இடையாயுள்ள சொப்பனவத்தைக்குச் சாக்ஷி மாத்திரமாக இருக்கும் பொருள். (அந்தரம்—இடை.)

** பரமாத்மா- சுழுத்தியின்கண் சீவனைப்போல அவித்தையில் முழுகாமல் எல்லாவற்றுக்கும் சாக்ஷி மாத்திரமாய் மேலாய் இருக்கும் பொருள்.

‡‡ ஞானாத்மா- அறியப்படும் பொருளாகாது எதையும் அபேக்ஷிக்காது எல்லாவற்றையும் அறிந்துகொண்டு தானே தானாய் எக்காலத்தும் விளங்கும் பொருள்.

||| கூடத்தர்- கூடமென்பது கொல்லனதுபணையாம். அதுபோல நிருவிகாரமாய் இருப்பவர் கூடத்தர். கொல்லன் அனேக அடிகளை அடித்தபோதிலும் பணை விகார படையாதிருத்தல் போன்று, மனமாகிய கொல்லன் விவகாரமாகிய அனேக அடிகளை அடித்த போதிலும் ஆத்மா எப்படியோ அப்படியே (நிருவிகாரமாய்) இருக்கிறது. ஆதலால் ஆத்மா கூடத்தர் எனப்படும்.

ஈசுரனுக்கு மூன்று சரீரங்களும் மூன்றவத்தைகளுஞ் சொல்லப்படுகின்றன. கற்பிதப் பிரபஞ்ச வடிவமாகத் தோற்றுகின்ற தூலபஞ்ச பூதங்களும், அவற்றிற் றோன்றிய மூன்று சாதிகளாயிருக்கின்ற தூலசரீர * சமட்டியுங் (முழுதுங்) கூடி ஈசுர தூலசரீரமென்றும், † விராட்டென்றுஞ்சொல்லப்படும். இதனுடனே(விராட்டென்னுந் தூல சரீரத்துடனே) கூடிச் சாக்கிராவத்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் ‡ வைசுவானரனென்றும், இந்த இருவகைக்கும் (தூலசரீர சமட்டிக்கும் சாக்கிராவத்தைக்கும்) ‖ அதிட்டான சைதன்னியம் பிரமனென்றுஞ் சொல்லப்படும். சூக்தம பூதங்கள் ஐந்தும் அவற்றிற் றோன்றிய சூக்குமசரீர சமட்டியுங்கூடி ஈசுர சூக்குமசரீரமென்றும் †† இரணிய கருப்பமென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே (இரணிய கருப்பமென்னுஞ் சூக்தம சரீரத்துடனே) கூடிச் சொப்பனவத்தையைப் பொருந்துகின்ற ஈசுரன்

---

* அநேக கோவியக்தி (வடிவு)களில் கோத்தன்மைசாதி உள்ளீடாயிருப்பதுபோல, சர்வ வியட்டித்தூல வியக்திகளில் உள்ளீடாயும், பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களின் காரியமாயும், சர்வ பிரமாண்ட வடிவமாயும், வியாபகமாயும் இருக்கின்ற சரீரம் தூலசரீர சமட்டி எனப்படும். அல்லது அநேக மரங்களின் கூட்டம் வனமெனப்படுவது போன்று சர்வவியட்டித்தூல சரீரங்களின்கூட்டம் தூலசரீர சமட்டி எனப்படும்.

† விராட்டு மேற்கூறிய ஈசுரதூலசரீரமானது பலவகைப்பட்ட பிரகாசம் உடைமையின் அதை விராட்டு என்பர்.

‡ ஈசுரன் சர்வநரர்களின் அபிமானியாயிருத்தலால், அதாவது சகலப்பிராணிகளின் சமூகத்திலும் 'அகம்-நான்' என்னும் அபிமானமுடையவனுயிருத்தலால் வைசுவானரன் எனப்படுவன்.

‖ எதனை (எந்தப்பிரமத்தை) அறியாமையால் ஆரோபம் (உலகாரோபம்) தோன்றுமோ, எதனை (எந்தப்பிரமத்தை) அறிவதால் அது (அவ்வுலகாரோபம்) நிவர்த்தியாகுமோ அது (அந்தப் பிரமம்) அதிட்டானம்.

†† ஈசுர சூட்சும சரீரமானது ஞானசத்தியுடைய அந்தக்கரண ஞானேந்திரியங்களை யுடைமையின், இரணியகருப்பமென்ற பெயர் பெற்றது. இரணியகருப்பம் – பொன்போன்ற பிரகாசத்தை மத்தியிலுடையது.



‡‡ சூத்திராத்மா வென்றும், இந்த இருவகைக்கும் (சூக்கும சரீரசமட்டிக்கும், சொப்பனவத்தைக்கும்) அதிட்டான சைதன்னியம் விஷ்ணுவென்றுஞ் சொல்லப்படும். இந்தத்தூலசூக்குமமாகிய இரண்டின் $ வாசனையுடனே (சூட்சுமநிலைமையுடனே) கூடியிருக்கின்ற மாயை ஈசுரகாரணசரீரமென்றும், ⊤ அவ்வியாகிருத மென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே (அவ்வியாகிருத மென்னுங் காரண சரீரத்துடனே) கூடிச் சுழுத்தியவத்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் × அந்தர்யாமி என்றும், இந்த இருவகைக்கும்

---

‡‡ ஆடையின்கண் நூலானது வியாபகமா யிருத்தல்போல சமட்டி சூட்சும சரீரம் பிரமாண்டமுழுதும் வியாபகமாம். இக்காரணம் பற்றி அச்சமட்டி சூட்சும சரீர உபகித ஈசுர சைதன்னியம் சூத்திராத்மா எனப்படும். சூத்திராத்மா சூத்திரம்போன்று வியாபகமாய் இருப்பது. சூத்திரம் – நூல்; ஆத்மா – வியாபகம்.

$ உபாதான வடிவமாக நிலைத்திருத்தலே சூட்சும நிலையாகிய வாசனைஎன்னுஞ் சொல்லுக்குப்பொருளாம்.

⊤ சிருட்டிக்கு முன்னர் மாயையின்கண் இவ்வெல்லா உலகின் நாம ரூபங்களும் வெளிப்படாமையால் அம்மாயையை அவ்வியாகிருதமென்பர். அவ்வியாகிருதம் – அப்பிரகடம் (நாமரூபங்களாக வெளிப்படாதது.) வியாகிருதம்-பிரகடம் (நாமரூபங்களாக வெளிப்படுவது)

× அந்தர்யாமி-உள்ளேயிருந்து அசைப்பவன். இங்கு, அந்தர்யாமியின் சொரூபத்தைப்பற்றி, "எந்தச்சர்வஞ்ஞப் பரமான்ம தேவரைப் பிருதிவி, ஜலம் அக்கினி, புவலோகம், வாயு, சுவர்க்கம், ஆதித்தியன், திசை, சந்திரன், தாரகை (நக்ஷத்திரம்), ஆகாசம், இருள், தேஜஸ் என்னும் 12 அதிதைவங்களின் கண் சுருதியானது கூறியிருக்கின்றதோ, எந்தப்பரமான்ம தேவரை, ஸ்தாவர ஜங்கம ரூப சர்வ அதிபூதங்களிடத்தே சுருதியானது கூறியிருக்கின்றதோ, எந்தச் சர்வஞ்ஞப் பரமான்ம தேவரைப் பிராணன், வாக்கு, சக்ஷு, சுரோத்திரம், மனம், துவக்கு, புத்தி, உபஸ்த இந்திரியம் என்னும் எண்வகையாய அத்தியாத்மங்களிடத்தே சுருதியானது கூறியிருக்கின்றதோ, எந்தப்பரமான்ம தேவர் பிருதுவி முதலிய 21 ஸ்தானங்களிலிருந்த போதிலும் அந்த ஸ்தானங்களினின்றும் வேறேயாவரோ, கிருகத்தையுடைய புருஷன் கிருகத்தினின்றும் வேறாக இருப்பதேபோல. எப்பரமான்மதேவர் பிருதிவி முதலியவற்றினின்றும்

(காரணசரீரத்துக்கும் சுழுத்தியவத்தைக்கும்) அதிட்டான சைதன்னியம் உருத்திரனென்றுஞ் சொல்லப்படும்.

சீவன் தன் மூன்றவத்தைகளினும் தன் மூன்று சரீரங்களா யிருக்கின்ற ¶ இருபத்தேழு தத்துவங்களுடனும், நானென்று கலந்து நிற்பதுபோல, ஈசுரனுந் தன் மூன்றவத்தைகளினும் தன் மூன்று சரீரங்களா யிருக்கின்ற T முப்பத்திரண்டு தத்துவங்களுடனுங் கலந்து நிற்பன். சீவன் தன் சரீர மாத்திரமே கலந்து நிற்பன். ஈசுரன் தன் சரீரமாகிய சகல சரீரங்களோடும் சகல பிரபஞ்சங்களோடுங் கலந்து நிற்பன். இந்த இரு வகைக்குஞ் (சீவனுக்கும் ஈசுரனுக்குஞ்) சாக்ஷியாய் இருக்கின்ற பிரம சைதன்னியமும் சகல சரீரங்களினும் சகல பிரபஞ்சங்களினும் நிறைந்து அப்பாலும் (அப்புறத்தும்) பத்துத் திக்கையும் அதிக்கிரமித்து (மீறி) எல்லையற்று (தேச பரிச்சேதமற்று) இருக்கும்.

---

வேறிருப்பரோ, பிருதிவி முதலியவற்றினுள்ளே இருந்தபோதிலும், எந்தப்பரமான்மதேவரை யவை யறியாவோ, அப்பரமான்மதேவர் பிருதிவி முதலியவற்றை நியமமாய்த் தத்தம் காரியத்தின்கண் முயல்விக்கும் பொருட்டு வேறொரு சரீரத்தைத் தரிக்கிலரோ, மற்றோ, ஜீவர்களாகிய நம்மனோருக்குச் சுக்கில சுரோணித விகாரரூப இச்சரீர மிருப்பதேபோல, எப்பரமான்மதேவருக்குப் பிருதிவி முதலியனவே சரீரமாமோ எங்ஙனம் அரசன் தனதுசேவகரை நானாவகையாய வியாபாரங்களில் நியமப்செய்து முயல்விப்பனோ; அங்ஙனம் எப்பரமான்மதேவர் பிருதிவி முதலியவற்றின், அபிமானிகளாய சேதனரூபலிங்க சரீரங்களைத் தத்தம் வியாபாரங்களில் நியமமாய் முயல்விப்பரோ, அந்தமாயையின் அதிபதியாய பரமான்மதேவரே அந்தர்யாமியாம் என்று ஆத்மபுராணம் கூறுவது உணரத்தக்கது. [அந்தர் = உள் யாமி = நடத்துபவன்]

¶ இருபத்தேழு. (தூலசரீரதத்துவம் 6; சூட்சும சரீரதத்துவம் 20, காரணசரீரதத்துவம் 1, ஆக 27).

T முப்பத்திரண்டு. சமட்டி தூல சரீரதத்துவம் 6, சமட்டி சூக்கும சரீரதத்துவம் 20, இவற்றின் வாசனையுடன் கூடிய காரண சரீரதத்துவம் 1, ஆகாயாதி பூதங்கள் 5 ஆக 32).



சீவன்றன் * தூலசரீர விவகாரத்திற்குக் கூடுந்தத்துவங்கள் தூலசரீரதத்துவங்கள் 6, சூட்சுமசரீரதத்துவங்கள் 20, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை(மாயை) பிரமம் 5 ஆகதத்துவங்கள் 31. † சூட்சும சரீர விவகாரத்திற்குக் கூடுந்தத்துவங்கள் சூட்சும சரீர தத்துவங்கள் 20. சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம் 5, ஆகதத்துவங்கள் 25. ‡ காரண சரீர விவகாரத்திற்குக் கூடுந்தத்துவங்கள் சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம் 5. § சீவவிவகாரத்திற்குக் கூடுந்தத்துவங்கள் சீவன் ஈசுரன் பிரமம் 3. †† சாக்ஷிவிவகாரத்துக்குள்ள தத்துவம் சாக்ஷி 1.

---

* தூலசரீர விவகாரத்திற்கு – சீவன் தனது சாக்கிராவத்தையில் தூலசரீரத்தோடு கூடிச்செய்யும் விவகாரத்திற்கு.

† சூட்சும சரீர விவகாரத்திற்கு – சீவன் தனது சொப்பனவத்தையில் சூட்சும சரீரத்தோடு கூடிச்செய்யும் விவகாரத்திற்கு.

‡ காரணசரீரவிவகாரத்திற்கு சீவன் தனது சுழுத்தியவத்தையில் காரண சரீரத்தோடு கூடிச்செய்யும் விவகாரத்திற்கு. இங்கு விவகாரம் என்பது அவித்தையின் சத்துவகுண விருத்தியால் அஞ்ஞானத்தையும், அதனால்மறைபட்டுள்ள பிரமானந்தத்தையும் அனுபவித்தலாம். இது சுழுத்தியின்கண் நிகழும் அனுபவ விசேஷம். இதற்குச்சான்று சுழுத்தியைவிட்டு எழுந்தவுடன் 'ஒன்றுமறியாமல் சுகமாய் உறங்கினேன்' என்னும் நினைவே (ஸ்மிருதியே) யாம்.

§ சீவ விவகாரத்திற்கு – சீவனது துரியாவத்தையிலுள்ள விவகாரத்திற்கு. இங்குவிவகாரம் என்பது சீவன் தன்நிச சொரூபமாகிய ஆத்மாவையறிந்து ஆத்மானந்தத்தை யனுபவித்தல். இத்துரியாவத்தையில் அவித்தையும், வித்தையும் தத்துவஞானத்தால் நாசமாய் விட்டன.

†† சாக்ஷிவிவகாரத்திற்கு – சீவன் துரியாதீத அவத்தையில் சாக்ஷி மாத்திரமாய் உள்ளவிவகாரத்திற்கு. இங்குவிவகாரமென்பது தானே தானாயிருத்தல். அல்லது பிரமம் எப்படியோ அப்படியே இருத்தல். இத்துரியாதீத அவத்தையில் அகண்டாகாரவிருத்திநழுவியமை அனுபவங்கொண்டுணர்க.

ஈசுரன்றன் தூலசரீர விவகாரத்திற்குக் கூடுந் தத்துவங்கள் சமட்டிதூல சரீரதத்துவம் 6, சமட்டி சூட்சும சரீரதத்துவம் 20, சமட்டி சீவன், அவித்தை 2, தூலபூதம் 5, ஈசுரன். வித்தை, பிரமம் 3, ஆக 36. சூட்சும சரீர விவகாரத்திற்குக் கூடுந் தத்துவங்கள் சமட்டி சூட்சுமசரீரதத்துவங்கள்20,சமட்டிசீவன்,அவித்தை2, சூட்சுமபூதம் 5, ஈசுரன், வித்தை, பிரமம் 3, ஆக 30. காரணசரீர விவகாரத்திற்குக் கூடுந் தத்துவங்கள் ஈசுரன், வித்தை, பிரமம் 3. ஈசுரவிரகாரத்திற்குக் கூடுந் தத்துவங்கள் ஈசுரன், பிரமம் 2. பிரம விவகாரத்துக்குள்ள தத்துவம் பிரமம் 1.

இந்திரிய விவகாரத்திற்குக் கூடுந் தத்துவங்கள் இந்திரியம் 1, தூலசரீர தத்துவங்கள் 6, அந்தக்கரணம் 5, வாயுக்கள் 5, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம் 5, ஆக 22. மனோ ராச்சிய விவகாரத்திற்குக் கூடுந் தத்துவங்கள் அந்தக்கரணம் 5, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்5, ஆக10. இப்படித்தத்துவங்களின் தோற்றமும் நிலையுஞ் சொல்லப்பட்டன.

இனித்தத்துவங்களொடுக்குகின்றவழிசொல்லுகின்றோம். சகல சீவர்களிடத்தினு மிருக்கின்ற தூலசரீரங்களனைத்தும் தமக்காதாரமான தூலபூதங்களில் மடிந்து பூதமாத்திரமாக வொடுங்கும். இந்தத் தூலபூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன்மாத்திரைகளான தாமத குண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவலம் இரணிய கருப்பாவத்தைநிலைமையென்று சொல்லப்படும்.

† சூட்சும சரீர தத்துவங்கள் 20 ம் கட்டுவிட்டுப் பூதங்களின் சாத்வீககுணமும் இராசத குணமுமாக ஒடுங்கும்.

---

† இங்கு, முன்னர் ஆசிரியர் கூறிய தோற்ற முறைப்படி அந்தக்கரணமைந்தும், ஞானேந்திரியமைந்தும் சத்துவகுணபூதம் ஐந்தினும், வாயுக்கள் ஐந்தும், கருமேந்திரியமைந்தும் இராஜோகுண பூதம் ஐந்தினும் ஒடுக்கிக்காண்க.



அஃதெங்ஙனமெனின், சகல பிராணிகளிடத்தினுமிராநின்ற அகங்காரமும் ஆக்கிராணமும் உதான வாயுவும் உபத்தமும் பிருதிவியிலொடுங்கும். சித்தமும் சிங்ஙுவையும் சமானனும் பாயுருவும்அப்பு விலொடுங்கும். புத்தியும் சக்ஷுவும் அபானனும் பாதமும் அக்கினியிலொடுங்கும். மனதும் துவக்கும் பிராணனும் பாணியும் வாயுவிலொடுங்கும். உள்ளமும் சுரோத்திரமும் வியானனும் வாக்கும் ஆகாயத்திலொடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும்.

இந்தச்சூட்சுமபூதங்களும் பிருதிவி அப்புவிற்கரைந்தொடுங்கும். அப்புவும் அக்கினியிற் சுவறி (வற்றி) யொடுங்கும். அக்கினியும் விளக்குப்போல் வாயுவிலணைந்தொடுங்கும். வாயுவும் ஆகாயத்திலோய்ந்தொடுங்கும். ஆகாயமும் விக்ஷேப சத்தியிலொடுங்கும். * ஆவரணசத்தியும் விக்ஷேபசத்தியும் மூலப்பிரகிருதியின் ⊤ தமோகுண மாத்திரமாய்

---

* ஆவரணசத்தி, மூலப்பிரகிருதியின் தமோகுணமாத்திரமாகி அவித்தையினும், விக்ஷேபசத்தி, மூலப்பிரகிருதியின் தமோகுணமாத்திரமாகி மாயையிலும் பின்னுமொரு சிருட்டிக்கு வித்தாக வொடுங்தும் என நிரலே (வரிசையாகப்) பொருள்கொள்க. ஆவரண சத்தி அவித்தையில் ஒடுங்காவிடின் உயிர்கட்குப் பிறப்பிறப்பு உண்டாதெனவும், விக்ஷேபசத்தி மாயையில் ஒடுங்காவிடில் இறைவனுக்கு உலகத்தை ஆக்கும் சங்கற்பம் உண்டாகாதெனவும் காண்க. இந்த; "ஆவரணசத்திப் பிரதானமான அஞ்ஞானம் அவித்தையெனப்படும். விக்ஷேபாதிசத்திப்பிராதனமான அஞ்ஞானம் மாயை யெனப்படும்" என்னும் தத்துவானு சந்தானக்கூற்று அறியத்தக்கது.

⊤ இங்குமாத்திரம் என்பது சத்துவகுண, தமோகுண வடிவமாவதில்லை என்பதை விளக்கி நின்றது.

¶ ஆலமரம் ஆலவிரையில் ஒடுங்கினாற்போலப் பின்னுமொரு சிருட்டிக்கு வித்தாக அவித்தையினும் மாயையினும் ஒடுங்கும்.

இந்தமாயையும் அவித்தையும் அதிநுண்மையான மூலப்பிரகிருதி யென்னும் விந்துதத்துவமாக (சத்தி தத்துவமாக) ஒடுங்கும். அவ்விந்துதத்துவமும் பாம்பு பழுதை மாத்திரமாக ஒடுங்கியது போலத் தனக்கதிட்டானமான $ பிரமசைதன்னிய மாத்திரமாக ஒடுங்கும்.

இப்படித்தோன்றி யொடுங்கிய தத்துவங்கள் 35. அவையாவன:= பூதங்கள் 5, தூலசரீர தத்துவங்கள் 6, சூட்சும சரீர தத்துவங்கள் 20, காரணசரீரமான மாயை அவித்தை 2, அவைகளிற் பிரதிபிம்பமாயுள்ள ஈசுரன் சீவன் 2 ஆகிய இவைகளாம்.

---

¶ இங்கு. மிகநுண்ணியதாய ஆல விரையில் மிகப்பெரிதாய் ஆலமரம் ஒடுங்கி (சூட்சுமமாயுளது); அம்மரம் தோன்றுவதற்குமுன் அவ்வாறு அவ்விரையில் இல்லையெனின் இல்லாத மலடி மகன் என்ஞான்றும் தோன்றாதது போல அம்மரமும அவ்விரையில் என்ஞான்றும் தோன்றாததேயாம் ஆதலின் அம்மரம் தான்றோன்றுதற்கு முன்னம் அவ்விரையில் ஒடுங்கியேயுளது. ஆனல், விரைநிலைமையில் அவ்வாலமரம் அவ்விரையில் வேர், கிளை, இலை முதலியவேறு பாட்டான் விளங்கமாட்டாது. அது போன்று என்று விரித்துப் பொருள் கொள்வதோடு உவமேயத்தையும் இவ்வாறு விரித்துப் பொருள் கொள்க.

$ இங்கு இவ்வுலகம் சிருட்டிக்கு முன்னர்ச் சத்தாகவேயிருந்தது என்னும் சுருதியின் பொருள் உணரத்தக்கது. மாத்திரம் என்பது இங்குச் சாங்கியர் முதலியோர் பிரகிருதி முதலியவற்றில் ஒடுக்கங் கூறுவதை மறுத்து நின்றது.



இப்படித்தோன்றியொடுங்கிய ⁂ பொய்ப்பொருள்கள் யாவும் மெய்ப்பொருளொன்றேயெனவும், அதுவே (மெய்ப்பொருளே) † சுபாவ சித்தமாகவும் (இயற்கையாகப் பெறப்பட்டதாகவும்) நிசமாகவு மிராநின்ற தன்வடிவமெனவும், அறிந்தவனே ‡ பிரம ஞானியாம். இங்ஙனம் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

---

⁂ பொய்ப்பொருள்யாவும் மெய்ப்பொருள்ஒன்றே' என்னும் வாக்கியத்திற்கு 'மகன்குற்றி' என்புழி மகனது இன்மையே குற்றி எனவும், அல்லதுமகனது இன்மையுடையது குற்றிஎனவும்பொருள் செய்வதுபோல, தோன்றியொடுங்கும் எல்லாப்பொய்ப்பொருள்களின் இன்மையே மெய்ப்பொருளாயுள்ள (அதிட்டானமாயுள்ள) அத்விதீய பிரமசொரூபமெனவும். அல்லது தோன்றியொடுங்கும் எல்லாப் பொய்ப்பொருள்களின் இன்மையுடையது மெய்ப்பொருளாயுளள அத்விதீய பிரமசொரூபமெனவும் பொருள் செய்க. இவற்றுள். முதல்பக்ஷம் பாஷ்யகாரரது இரண்டாம் பக்ஷம் நியாயவாசஸ்பதிமிசிரரது.

†இங்குச்சுபாவசித்தமென்ற பதத்தால் அம்சாம்சிபாவம் (கூறு கூறுடையதென்னுந்தன்மை),விகாரவிகாரிபாவம் (திரிபுதிரிபுடையதென்னுந்தன்மை.) உபாசக உபாசியபாவம் (உபாசனைசெய்பவன் உபாசனைசெய்யப்படுவதென்னுந்தன்மை) முதலியனபோல, ஆன்மாவிற்கும் பிரமத்திற்குஞ் சிறிதும் பேதமின்றென்பதையும். பேதமின்மையின் காரியத்தன்மை (காரணத்தின் அதீனமாந்தன்மை), பிரகாசியத்தன்மை (பிரகாசத்தின் அதீனமாந்தன்மை), ஆதேயத்தன்மை (ஆதாரத்தின் அதீனமாந்தன்மை) யாகிய பரதந்திரம் (ஒன்றன் அதீனம்) உடையதன்று என்பதையும் குறிப்பித்தனர் ஆசிரியர்

‡ பொய்ப்பொருளை மெய்ப்பொருளாகக் காணுதலும், மெய்ப்பொருளைத்தானெனவுணர்தலும் பிரமஞானியின் இலக்கணமாம்.

தத்துவம் 36ல் பூதம் 5, மாயை 1, மாயாப்பிரதி பிம்பரான ஈசுரன் 1, பிரமம் 1 ஆகிய இந்த எட்டும் சகலபிராணிகட்குஞ் சமுதாயமாக (பொதுவாக) அனுபவிக்கப்படும். *எங்ஙனமெனின், சகலர்க்கும் பிருதிவி இறக்கில் ஆதாரமில்லை. அப்பு விறக்கில் குளிர்ச்சியில்லை. தேயுவிறக்கில் பாகமில்லை. வாயுவிறக்கில் பிராணனியக்கமில்லை ஆகாயமிறக்கில் அவகாச (இட) மில்லை. மாயையும் மாயாப்பிரதிபிம்பரு (ஈசுரரு) மிறக்கில் சகலசமயங்கட்குந் தெய்வமில்லை. பிரமமில்லையாயின் சகலர்க்கும் அறிவில்லை. ஆதலால் இந்த எட்டும் எல்லோருக்குஞ் சமுதாயமாம்.

மற்றைய 28 தத்துவங்களும் அவனவனுக்குப் பிருதக்காக (வேறுவேறாக) அனுபவிக்கப்படும். அஃதேதனாலெனின் ஒருவனுக்குத் தூலசரீரமிறக்கில் எல்லோருக்குமிறவாதபடியினானும், சூட்சுமசரீரத்தில் ஒருவனுக்கு அங்க வைகல்யம் (உறுப்புக்குறைவு) வந்தால் எல்லாருக்கும் வராதபடியினானும், முத்தராயிருந்த சுகர் வாமதேவராதியர்கட்கு அவித்தையுஞ் சீவனுமிறந்து போயிருக்க மற்றையர்க்கெல்லா மிறவாதபடியினானும் இவ்விருபத்தெட்டுத் தத்துவங்களும் பிருதக்கென்பதிற் சந்தேகமில்லை.

---

* சமுதாயதத்துவங்களை எதிர்மறை முகத்தால் விளக்குகின்றார் ஆசிரியர்.



இத்தத்துவங்கள் முப்பத்தாறில் எப்போதுந்தானாகவே காணப்படுகிற தத்துவம்1 எப்போதுந் தனக்கன்னியமாகவே காணப்படுகிற தத்துவங்கள் 7. தானாகவும் தனக்கன்னியமாகவும் அனுபவிக்கப்படுகிற தத்துவங்கள் 28.

அஃதெங்ஙனமெனின் அவத்தாத்திரய சாக்ஷியாகியபிரம சைதன்னியம் எல்லா அவத்தையினும் (சாக்கிர முதலியசர்வ அவத்தைகளினும்) தானாகவே விளங்குகையினாலும் மற்றத் தத்துவங்கள்போல அன்னியமாகக் காணப்படாத படியினானும் பிரமசைதன்னிய மொன்றுமே தானாகக் காணப்படுகிறது.

பஞ்சபூதம் மாயை மாயாப்பிரதிபிம்பராகிய ஏழும் தன் தன் தொழிலான பொறுத்தல், பிண்டீகரித்தல், தகித்தல், உலர்த்தல், இடங்கொடுத்தல், † தசாவதாரம், ‡ பஞ்சகிருத்தியங்கள் ஒருகாலத்தினும் தன்தொழிலாகக் காணப்படாமையால் தனக்கன்னியமே யல்லாமற் றானாகமாட்டா.

---

† "மச்சங் கூர்மம் வராக நரசிங்கம்
வாமனன் பரசுராம னிராமன்
பலபத் திரனே கண்ணன்வரு கற்கியென்
றிவையொரு பத்து மரியவ தாரம்"
என்னும் பிங்கலநிகண்டினால் தசாவதாரத்தை யுணர்க.

‡ பஞ்சகிருத்தியங்கள்:- சிருட்டி, திதி, (காத்தல்) சங்காரம், திரோபவம் (மறைத்தல்), அனுக்கிரகம் (கிருபைசெய்தல்).

மற்றை 28 தத்துவங்களுள் நான் பிராமணனாதிய வருணத்தன்; பிரமசரியமாதிய ஆச்சிரமி; நான் ஆண், பெண், கருவல், சிவலை, கட்டையன், நெட்டையன்; நான் பருத்தேன், இளைத்தேனென்று தானாக வழங்கப்படுகிற தூல சரீரங்கள் ஆறு தத்துவங்களும், மற்றொருவேளையில் தனக்குப்புறம்புபட்டு என்மாடு என்கன்று என்றாற்போல என்சரீரம் பருத்தது, இளைத்தது. நரைத்தது; என்சரீரம்பிறந்து இத்தனை நாளாயிற்றென்று வேறாக வழங்கப்படுகின்றமையினாலும், நான் கண்டேன், கேட்டேன். பரிசித்தேன், வசனித்தேன், கொடுத்தேன், நடந்தேன், சங்கற்பித்தேன், நிச்சயித்தேன், இந்தப் பஞ்சத்திற் கச் சீவித்தேனென்று தானாகவழங்கப்படுகிற சூட்சும சரீரதத்துவம் 20ம் மற்றொருவேளையிற் றனக்குப்புறம்புபட்டு என்னுடைமை என்வீடு என்றாற்போல என்கண், என்காது, என்துவக்கு, என்வாக்கு, என்கை, என்கால், என்மனம், என்புத்தி, என்பிராணன் என்று வேறாக வழங்கப்படுகின்றமையினாலும், நானறியேன், நானறிவேன், என்று தானாக வழங்கப்படுகிற அஞ்ஞானமும்(அவித்தையும்) சீவனும் மற்றொருவேளையிற் புறம்புபட்டு என்னஞ்ஞானம் என்ஜீவன் என்று வேறாகவழங்கப்படுகின்றமையினாலும், இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் தானாகவும் தன்க்குஅன்னியமாகவும் அனுபவிக்கப்படுகின்றனவாம்.

சங்கை:- இந்த 28 தத்துவங்களும் தானானால் சாக்ஷியைப்போல ஒரு தன்மையாகத் தோற்றவேண்டுமே யல்லாமல் பஞ்சபூதங்களைப்போலத் தனக்கன்னியமாகத் தோற்ற நியாயமில்லை. தனக்கன்னியமானால் எப்போதும் புறம்பாகத் தோற்றவேண்டுமே யல்லாமல் தானாக வழங்கற்கு நியாயமில்லை தானுமாய்த் தனக்கு அன்னியமுமாயிருக்கு மெனல் *இருட்டாதித்தியன என்றாற்போலும் வெள்ளாள தீக்ஷிதனென்றாற்போலும் விருத்தமாமேனின்.

* இருளாகவும் ஆதித்தியனாகவும் ஒருபொருள் உண்டென்று கூறல் எங்ஙனம் விருத்தமோ (விரோதமோ) அதுபோலும்; வெள்ளாளனாகவும் தீக்ஷிதனாகவும் ஒருவன் உண்டென்று கூறல் எங்ஙனம் விருத்தமோ அதுபோலும்: இந்த 28 தத்துவங்களும் தானுமாய்த் தனக்கன்னியமாயிருக்கும் என்று கூறல் விருத்தமாம்.



உத்தரம்:- பரமார்த்தமாக (உண்மையாக)த் தானென்கின்றது ஒருவகையும், * அத்தியாசத்தினாலே தானென்கின்றது ஒருவவகையும் ஆக இருவகையுமுண்டு. சாக்ஷி சைதன்யத்தைத் தானென்கின்றது பரமார்த்த மல்லாமல் உபசாரமல்ல தனக்கன்னியமாகிய இருபத்தெட்டையும் தானென்கின்றது கட்டையைக் கள்ள னென்றாற்போலும்; பழுதையைப் பாம்பென்றாற்போலும்; புத்திரதாராதிகளைத் தானென்றாற்போலும், T அத்தியாசமேயன்றி உண்மையல்லாமையால் விருத்தமன்றாம்.

* இங்கு, அத்தியாசமென்னுஞ் சொல்லாற் காரண அத்தியாசத்தைக் கொள்க.

அத்தியாசமானது ஞானத்தியாசம் அர்த்தாத்தியாசம் எனவும். காரணாத்தியாசம காரியாத்தியாசம் எனவும் பகுக்கப்படும். ஞானத்தியாச அர்த்தாத்தியாசங்களின் பகுப்பும் உதாரணங்களும் முன்னா (சுத்தியில் இரசதம்போல மூலப்பிரகிருதி என்னும் ஒரு சத்தியுண்டு என்பதன் உரையில்) கூறப்பட்டன. ஆங்குணர்க.

தனனை (ஆத்மாவை) ஆனந்தம், அத்துவைதம், பிரமம் முதலிய விசேட வடிவத்தான் உணராமையே அஞ்ஞானமாம். இதுவே உடல் முதலியவை தோன்றற்கும். இவற்றை நான் என்று பற்றற்கும் காரணம். அதன் அத்தியாசம் காரண அத்தியாசம். மற்றவை காரியாத்தியாசமாம். உடன் முதலிய அத்தியாசத்திற்குக் காரணம் அஞ்ஞானம், அஞ்ஞான அத்தியாசத்திற்குக் காரணம அன்னியமொன்றுமில்லை. ஆதலின், அஞ்ஞானம் அத்தியாசம் என்றல் பொருந்தாது என்றாலும், அஞ்ஞான கற்பிதமாதலின் உடன் முதலியன அத்தியாசமாதல்போல. அஞ்ஞானமும் அஞ்ஞான கற்பிதமாதலின் அஞ்ஞானம் அத்தியாசமாதல் அமையுமெனவும் செய்தற்கரிய காரியத்தைச் செய்துமுடிக்கும் ஆற்றலுடைமையின் அஞ்ஞானமும் அஞ்ஞான கற்பிதமென்பதில் ஆன்மாசிரய முதலிய எக்குற்றமும் இல்லை எனவும் உணர்க.

T இங்கு, அத்தியாசமென்றது அறுவகை அர்த்தாத்தியாசங்களுள் ஒன்றாய கேவலசம்பந்தாத்தியாசத்தினையும், அதனை விஷயஞ்செய்யும் ஞானத்தியாசத்தினையும் அறுவகை அர்த்தாத்தியாசங்களாவன:—(1) கேவல சம்பந்தாத்தியாசம். (2) சம்பந்த சகித சம்பந்தியினத்தியாசம், (3) கேவல தர்மத்தினத்தியாசம், (4) தர்ம சகிததர்மியினத்தியாசம், (5) அன்னியோன்யாத்தியாசம்,(6) அன்னியதராத்தியாசம் என்பன.

... ... ... ...

---

1. கேவலசம்பந்தாத்தியாசமாவது:— ஒருவஸ்துவில் வேறொரு வஸ்துவின் சம்பந்தமாத்திரம் அத்தியாசமாதல். இது வெள்ளி' யென்புழி வெள்ளியில் இதுவெனப்படும் சுத்தியினது தாதான்மிய (அபேத) சம்பந்த மாத்திரம் அத்தியாசமாவதுபோல 'நான் மனிதன்' என்புழி மனிதத்தன்மை விசிட்ட சரீரத்தில் நானென்று கூறப்படும் ஆத்மாவினது தாதான்மிய சம்பந்தமாத்திரம் அத்தியாசமாவது காண்க. இவ்வாறு தனக்கன்னியமாகிய இருபத்தெட்டையும் தானென்பதும் கட்டையைக் கள்ளனென்பதும், பழுதையைப் பாம்பென்பதும், புத்திரதாராதிகளைத் தானென்பதும் கேவல சம்பந்தாத்தியாசமேயாம்.

2. சம்பந்த சகித சம்பந்தி அத்தியாசமாவது —ஒரு வஸ்துவில் வேறொரு வஸ்துவும், அதன் சம்பந்தமும அத்தியாசமாதல். 'வெள்ளி யிது' என்புழி 'இது' வெனப்படும் சுத்தியில் வெள்ளியின் சம்பந்தமும், வெள்ளியின் சொரூபமும் அத்தியாசமாவதுபோல, 'மனிதன்யான்' என்புழி, 'யான்' என்று கூறப்படும் ஆத்மாவில் மனிதத்தன்மை விசிட்ட சரீரத்தின் சம்பந்தமும் அச்சரீரத்தின் சொரூபமும் அத்தியாசமாவது காண்க.

3 கேவலதர்மாத்தியாசமாவது:- ஒரு வஸ்துவில் வேறொரு வஸ்துவின் தர்மமாத்திரம அத்தியாசமாதல். 'படிகம் சிவப்பு' என்புழி, படிகத்தில் பூவின் சிவப்புத் தருமமாத்திரம் அத்தியஸ்தமாவதுபோல, 'யான் வெள்ளையன்' 'யான் குருடன்' என்புழி யான்' எனபபடும் ஆத்மாவில் தூலதேகத்தின் வெண்மைத்தரும மாத்திரமும் நேத்திரேந்திரியத்தின் குருட்டுத்தரும மாத்திரமும் அத்தியஸ்தமாவது காண்க.

4. தர்ம சகித தர்மியத்தியாசமாவது:- ஒருவஸ்துவில் வேறொரு வஸ்துவின் தர்மமும், தர்மியும் அத்தியாசமாதல். 'இது வெள்ளி' என்புழி 'இது' எனப்படும் சுத்தியில் வெள்ளித்தன்மைத் தர்மமும், அதனையுடைய வெள்ளியின் சொரூபமும் அத்தியஸ்தமாவதுபோல, 'யான்கர்த்தா, போக்தா' என்புழி 'யான்' எனப்படும் ஆத்மாவில் கர்த்துருத்துவ தர்மமும், போக்துருத்துவ தர்மமும் அவற்றையுடைய அந்தக்கரணத்தின் சொரூபமும் அத்தியாசமாவது காண்க.



ஆகையால், அஞ்ஞானகாலந் தொடங்கித்தானல்லவென்று காணப்பட்ட தத்துவங்கள் 7. இப்படிப்பட்ட விவேகம் உண்டாகிய பின்பு தானல்லவென்று காணப்பட்ட தத்துவங்கள் 28. ஆகிய இந்த 35 தத்துவங்களையும் அதற்குள்ள குணங் குறி (சிறப்பியல்பு) களுடனே கூட்டிக்காண்கின்ற அறிவானது கடத்தைப்பார்க்கின்றவன் கடத்துக்குப் புறம்பாகவேயிருந்து கடத்தைப் பார்க்கின்றதுபோல. அவைகட்கு அன்னியமாகவேயிருந்து அவைகளை அறிகிறதென்றும் † முப்பத்தாறுந் தத்துவமாகிய அதுவே தானென்றும் தானே பரமசிவமென்றுங் கலக்கமறத் (ஐயந்திரிபறத்) தெளிந்தவனே சிவதரிசன முடையவனும்.

---

5. அன்னியோன்னியாத்தியாசமாவது:— பரஸ்பரத்தில் பரஸ்பரம் அத்தியாசமாதல். காய்ச்சிய இரும்புருண்டையில் இரும்பின் தர்மம் (உருண்டையாயிருக்கும் தன்மை) நெருப்பிலும், நெருப்பின் தர்மம் (ஒளிர்வு) இரும்பிலும் அத்தியஸ்தமாவதுபோல. ஆத்மாவில் அனாத்மாவும், அனாத்மாவில் ஆத்மாவும் (ஆத்மாவின் சம்பந்தமும்) அத்தியாசமாவது காண்க.

6. அன்னியதராத்தியாசமாவது — இரண்டனுள் ஒன்று அத்தியாசமாதல். 'சுத்தி' 'வெள்ளி' என்னுமிரண்டனுள் சுத்தி அத்தியஸ்தமாகாது வெள்ளி அத்தியஸ்தமாவதுபோல, 'ஆத்மா' 'அனாத்மா' என்னு மிரண்டனுள் ஆத்மா (ஆத்மாவின் சொரூபம்) அத்தியஸ்த மாகாது அனாத்மா அத்தியஸ்தமாவது காண்க.

† பிரமத்தின் பரோக்ஷத்வப் பிராந்தியையும் அநாத்துமத்வப் பிராந்தியையும் ஒழிக்க அதுவேதானென்றும், ஆன்மாவின் பரிச்சின்னத்வப் பிராந்தியையும் பிரம்மமல்லாத்தன்மையையும் ஒழிக்கத் தானே பரசிவமென்றும் சிந்தித்தலை ஓதப்புரோத மென்பர். இதன் விளக்கம் உணரவிரும்பின் சசிவன்னபோதம் தத்துவப்பிரகாசிகை 83-வது செய்யுளின் விசேட உரையிற்காண்க.

†† இப்படிப் பிரமமே தாமென்றும், மற்றை 35 தத்துவங்களும் தமக்கன்னியமென்றும், பிரித்தறியாத அவிவேகிகள் அகங்காரக் கிரந்தியினாலே புத்திர தாராதிகள் தபிக்கின்றதைத் தாம் தபிக்கின்றோமென்கின்ற மூடகரம் (மூடச்செய்கை) போல இந்த இருபத்தெட்டினுடைய தொழில்களையும் தந்தொழில்களென்று மயங்குகின்றமையால் இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட (சம்பாதிக்கப்பட்ட) புண்ணியபாவம் ‡ முதலிய கன்மங்களிற் கட்டுப்பட்டு அந்தக்கன்மங்களின்படியே சனன மரண ‡‡ முதலிய சம்சாரங்களில் அடிபடுகிறோமென்று மயங்குவர்.

$ பிரம சைதன்னியமே தானென்றும் மற்றைய 35 தத்துவங்களுந் தானல்லவென்றும் தெளிந்த விவேகியானவன் அகங்காரக் கிரந்தி யற்றபடியினாலே இந்த இருபத்தெட்டின் தொழில்களையும் நான் செய்யவில்லையென்றும் இந்த இருபத்தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்கவில்லையென்றுந் திடப்படத்தேறி மயக்கமற்றிருக்கின்றமையால் இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டுக் கன்மசம்பந்தமில்லாமையால் சனன மரண முதலிய சம்சாரமில்லாமல் முத்தனாகிப் பிரம மாத்திரமாகவே யிருப்பான்.

---

†† இங்கு, வினை தன்னையாக்கிய அஞ்ஞானிகளை விடாது தொடர்ந்து சனன மரண முதலிய பயனளிக்கும் ஏதுவை விளக்குகின்றார் ஆசிரியர்

‡ 'முதலிய' என்னுஞ் சொல்லால் மிசிரகன்மமும் கொள்க.

‡‡ 'முதலிய' என்னுஞ் சொல்லால் மூர்ச்சை முதலாயினவுங் கொள்க.

$ இங்கு, வினை தன்னையாக்கிய ஞானிகளை விடாது தொடர்ந்து சனனமரண முதலிய பயனளிக்காத ஏதுவை விளக்குகின்றார் ஆசிரியர்.



இவனைச் * சீவன் முத்தனென்றுந் † திடப்பிரஞ்ஞனென்றும் ‡ பகவற்பத்தன் என்றும்

---

* இங்கு "பிரமத்தை யுணர்ந்தவன் இந்திரியங்கள் இலயமாகாமலே விழிக்கின்றான். அதாவது ஜாக்கிராவஸ்தையை யநுபவிக்கின்றான். ஜாக்கிராவஸ்தையிலும் கண் முதலிய இந்திரியங்களால் உருவ முதலிய விஷயங்களைக் கவராமையால், அவன் அதே ஜாக்கிராவஸ்தையில் உள்ளவனே யானாலும், சுழுப்தியிலுள்ளவனே யாவன். ஆதலினன்றே, இந்திரியங்களைக் கொண்டு பொருள்களையறிவதாகிய ஜாக்கிரம் இல்லாதவனும், அளவற்ற ஏகரச இன்பானுபவ முடையவனும், நன்மை தீமையாகிய வெல்லா வாசனைகள் இல்லாதவனுமாகிய பிரமவேத்தா எவனோ, அவன் சீவன் முத்தன் எனப்படுகின்றான்". என்று சீவன் முத்தன் இலக்கணத்தைவாசிட்டங்கூறுவது உணரத்தக்கது.

† இங்கு, 'திதப்பிரஞ்ஞன்' எனினும், 'திடப்பிரஞ்ஞன்' எனினும் ஒக்கும். சலித்தலில்லாத அஹம்பிரமாஸ்மி என்னும் பிரஞ்ஞை எவனுக்கோ அவன் ஸ்திதப்பிரஞ்ஞனும். "மனதிலுற்ற கர்மங்களனைத்தையும் விடுத்தவனும், அகண்ட ஏகரச இன்பவடிவான பிரத்தியகாத்மாவின்கண் யோகப்பயிற்சியானே வசம்பண்ணப்பட்ட மனத்தால் தனது சொரூபானந்தத்தை அநுபவித்தவனாய்மகிழ்வையுடையவனுமாவனோ அப்பொழுது அந்தவித்துவான் ஸ்திதப்பிரஞ்ஞன் எனப்படுகின்றான்". என்று திடப்பிரஞ்ஞனிலக்கணத்தைப் பகவற்கீதை கூறுவதுகாண்க.

‡ இங்கு " எல்லாப் பூதங்களினிடத்தும் (தாவரசங்கமரூப எல்லாப்பூதங்களினிடத்தும்) துவேஷ மில்லாதவனும், நட்பு தயையுடையவனும், யான் எனது என்னும் அபிமானம் இல்லாதவனும், சுகதுக்கங்களிற்சமானனும், பொறுமையுடையவனும், எப்பொழுதும் சந்துஷ்டனும், மனோநிக்கிரகமும் உறுதியான நிச்சயமும் உடையவனும், பரமாத்மாவாகிய வென்னிடத்து அர்ப்பணம்செய்யப்பட்ட மனோபுத்திகளையுடையவனுமான என் பக்தன் எவனோ அவன் பரமேசுவரனாகிய எனக்கு மிகப்பிரியன்". என்னும் பகவற்கீதையினால் பகவற் பத்தன் இலக்கணம் அறிக.

§ குணாதீதனென்றும் $ பிராமண னென்றும் †† அதிவருணாச்சிரமி யென்றும் வாசிட்ட முதலிய சாத்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத்தத்துவங்களை விசாரம் பண்ணி மோக்ஷமடையக்கடவர்.

---

§ "சத்துவகுண காரியமாகிய பிரகாசத்தை (ஞானத்தை)யும், ரஜோகுண காரியமாகிய பிரவிருத்தி (முயற்சி) யையும், தமோகுண காரியமாகிய மோகத்தை (மயக்கத்தை) யும் ஒருகாலும் துவேஷம் செய்யாதவனும், நிவிருத்தியானவற்றை இச்சியாதவனும், உதாசீனன் போன்றிருப்பவனும், சத்துவ முதலிய குணங்களால் சலனப்படாதவனும், அக்குணங்களே பரஸ்பரம் சாதக பாதக பாவங்களாகவும், கிராகிய கிராககபாவங்களாகவும், உபகாரிய உபகாரக பாவங்களாகவும் இருக்கின்றனவென நிச்சயித்திருப்பவனும் சிறிதளவும் தொழிற்படாதவனும், சுகதுக்கங்களில் சமமும், சொரூபத்தில் ஸ்திதமும், ஓடு கல் பொன்களில் ஒப்பும், பிரியாப்பிரியங்களில் சமமும், தனது நிந்தை புகழில் சமமும் உடையதீர புருஷனும், மானாவமானங்களிலும் மித்துரு சத்துருக்களிடத்திலும் சமனும் சர்வாரம்பப் பரித்தியாகியும் (லௌகீக வைதிக வடிவ சர்வபிரயத்தினங்களையும் பரித்தியாகம் செய்தவனும்) எவனோ அவன் குணா தீதன் எனப்படுகின்றான்" என்று குணாதீதனிலக்கணத்தைப் பகவற்கீதை கூறுவது காண்க.

$ இங்கு, "இஷ்ட வஸ்துவைப் போற்றாதவனும், ஆரம்பங்களனைத்தும் (சர்வ முயற்சிகளையும்) ஒழித்தவனும் வந்திப்பு (நமஸ்காரம்) இல்லாதவனும், தனது பிறரது துதிநிந்தைகளில்லாதவனும், முயற்சியன்றியிற் கிடைத்த பொருளிலும் தீனத்தன்மை (விரும்புந்தன்மை) யில்லாதவனும், சர்வ லௌகீக வைதிக கர்மங்கள் நீங்கியவனுமானவன் எவனோ அந்தத் தத்துவமுணர்ந்த ஞானியைத் தெய்வத்தன்மை பொருந்திய பிராமணன் என்றறிதி" என்று பிராமணனிலக்கணத்தை வியாசபாரதம் கூறுவதுகாண்க.

†† இங்கு, "பிரத்யகாத்மாவாகிய என்னிடத்தில் சொப்பன பிரபஞ்சம் மாயையால் எவ்வாறு கற்பிதமாமோ, அவ்வாறே இச்சாக்கிர பிரபஞ்சமும் என்னிடத்தில் மாயையாற் கற்பிதமாம். இவ்வண்ணம் எந்தப்புருஷன் வேதாந்தவசனங்களினாற் கற்பித பிரபஞ்சமனைத்திற்கும் அதிஷ்டானமாகிய ஆத்மாவைச் சாட்சாத்கரிக்கின்றானோ அந்தத்தத்துவ முணர்ந்தபுருஷன் அதிவருணாச்சிரமி எனப்படுகின்றான்" என்று அதிவருணாச்சிரமி இலக்கணத்தை வடமொழி ஸ்காந்தபுராணம் கூறுவது உணரத்தக்கது.

# பிழையும், திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 13 | சமுதாயமாம | சமுதாயமாம் |
| ,, | 21 | சநதேகமில்லை | சந்தேகமில்லை |
| 3 | 8 | பரமென்று | பரமென்னும் |
| 12 | 9 | வெள்ளியின | வெள்ளியின் |
| 13 | 14 | மெனவும | மெனவும் |
| ,, | 24 | ஆங்கு எதிரில்) | ஆங்கு (எதிரில்) |
| ,, | 25 | கூடாதெனவும், உட்கொண்டு | கூடாதெனவும் உட்கொண்டு, |
| ,, | 26 | வாசனையுடையானது. | வாசனையு டையானது |
| 14 | 23 | வெள்ளிததன்மை | வெள்ளித்தன்மை |
| 15 | 1 | ஒரு சத்தியுண்டு. அந்தச் சத்தியும் | ஒரு சத்தியுண்டு. |
| ,, | 27 | பிருகிருதி | பிரகிருதி |
| 16 | 8 | ராஜதம | ராஜதம் |
| ,, | 9 | இருளென்றும | இருளென்றும் |
| 17 | 2 | நல்விணக்கண | நல்விலக்கண |
| 18 | 18 | சர்வஞ்ஞத | சர்வஞ்ஞத் |
| ,, | 22 | பதும | பதும் |
| 19 | 16 | மேமபடும்போது | மேம்படும்போது |
| 22 | 14 | பேது | போது |
| 23 | 18 | குணஙகளும் | குணங்களும் |
| 25 | 18 | உணடெனின் | உண்டெனின் |
| ,, | 26 | இருளபோன் | இருள்போன் |
| 27 | 32 | நவநீதம | நவநீதம் |
| 29 | 20 | நிசசயம் | நிச்சயம் |
| 32 | 10 | உதராக்கிளி | உதராக்கினி |
| 38 | 15 | மரஙகொடி | மரங்கொடி |
| ,, | 25 | சருமம | சருமம் |
| ,, | 26 | மச்சையயையும் | மச்சையையும் |
| 41 | 8 | வம்துவக்கிந்திரியமும் | வும்துவக்கிந்திரியமும் |
| 43 | 9 | எனவஞ் | எனவுஞ் |
| 44 | 18 | கோத்தன்மைசசாதி | கெத்தன்மைச்சாதி |
| 45 | 18 | வாசனை என்னுஞ் | வாசனை என்னுஞ் |

| | | | |
|---|---|---|---|
| 46 | 35 | சரீரதத்துவம | சரீரதத்துவம் |
| 48 | 9 | ஈசுரவிரகாரத்திற்குக் | ஈசுரவிவகாரத்துக்குக் |
| 49 | 23 | டாதெனவும் | டாகாதெனவும் |
| ,, | 29 | இங்குமாத்திரம் | இங்கு, மாத்திரம் |
| 50 | 16 | ஒடுஙகி | ஒடுங்கி |
| ,, | 18 | அமமரமும | அம்மரமும |
| 51 | 15 | ளாயுளள | ளாயுள்ள |
| ,, | 16 | பாஷ்யகாரது | பாஷ்யகாரரது |
| 54 | 28 | இருட்டாதித்தியன | இருட்டாதித்தியன் |
| 55 | 16 | முன்னர | முன்னர் |
| ,, | 28 | செய்துமுடிக்கும் | செய்து முடிக்கும் |
| ,, | 29 | எக்குற்றமும | எக்குற்றமும் |
| 56 | 5 | வெள்ளி'' | "வெள்ளி'' |
| ,, | 14 | சம்பந்தமும | சம்பந்தமும் |
| ,, | 21 | தர்மமாத்திரம | தர்மமாத்திரம் |
| 59 | 32 | பததன் | பத்தன் |
| 60 | 18 | சமனும | சமனும் |

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17692

குடியேற்றம் குமரன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| நாலுஜீவவாதக்கட்டளை இலகுபோதினி என்னும் உரை | 0 | 4 | 0 |
| மஹாராஜா துறவு | 0 | 2 | 0 |
| சசிவன்னபோதம் தத்துவப்பிரகாசிகை யென்னும் உரை | 1 | 0 | 0 |

கிடைக்குமிடம்:—

திருவாளர் பு. நா. கா. கங்காதர முதலியார்,
வேதாந்தத்தமிழ் வாசக சாலை,
பிச்சனூர், குடியாத்தம்.

,, சி. ப. முனிரத்தின முதலியார்,
நால் மளிகை,
பிச்சனூர், குடியாத்தம்.

,, எ. மு. நாகமுனி முதலியார்,
மண்டி,
இராய வேலூர்.

குடியாத்தம் குமரன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.